# அறிவித்தல்

**கல்வி அமைச்சு**

## 2022 ஆம் ஆண்டில் அரசாங்க பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பான ஆலோசனைகள்

2022 ஆம் ஆண்டில் அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் தரத்தில் தமது பிள்ளைகளை அனுமதிக்க எதிர்பார்க்கும் பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையவும் வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்களை தமக்குப் பொருத்தமான பாடசாலைகளின் அதிபர்களுக்கு 2021 **ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். **அனைத்து தகுதிகளும் பூர்த்தியாக்கப்படவேண்டியது 20021 ஜூன் 30 திகதிக்கு செல்லுபடி ஆகுமாறு இருப்பதோடு அனைத்து எழுத்து ஆவணங்களும் அத்தினத்துக்கு இணங்க சமர்ப்பிக்கப்படவேண்டும்.**

விண்ணப்பங்கள் கீழே பிரசுரிக்கப்படும் மாதிரிக்கு ஏற்ப தயார் செய்யப்படுதல் வேண்டும்.

## 2022 ஆம் ஆண்டில் ........................................................... வித்தியாலயத்தில் முதலாம் தரத்திற்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பப் படிவம்

**(பிள்ளையின் பிறப்பு சான்றிதழின் பிரதி ஒன்றினையும் சமா்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்களை சான்றுறுதிப்படுத்த தேவையான ஆவணங்களின் பிரதிகளையும் சத்தியக்கடதாசி மூலம் உறுதிப்படுத்தி இதனுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.)**

01. **விண்ணப்பிக்கும் வகை :-** ...........................................................
**(ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளுக்கு தகைமை பெறின் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்)**

02. **பிள்ளை பற்றிய விபரம்** :

2.1 முழுப் பெயர் :-
.......................................................................................................
(குடும்பப் பெயரின் கீழ்க் கோடிடுக)

2.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்):-
..........................................................................
(கடைசியில் வரும் ஒரு பெயரை மாத்திரம் எழுதுக உ-ம் : எஸ்.ஜே. ரூபன்)

2.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்):-
..........................................................................
(கடைசியில் வரும் ஒரு பெயரை மாத்திரம் எழுதுக உ-ம் : S.J.Ruban.)

2.4 பால் (ஆண் /பெண்) :-
.......................................................................................................

2.5 சமயம் :- .......................................................................................................

2.6 போதனா மொழி (சிங்களம் /தமிழ்)
.......................................................................................................

2.7 பிறந்த திகதி : வருடம் :…....   மாதம் :……  திகதி :……

2.8 2022 ஜனவரி 31ஆம் திகதியன்று வயது :…… வருடம்  …… மாதம் ….. நாள்

03. **விண்ணப்பதாரியின் விபரங்கள்** : (தாய்/ தந்தை/ சட்டரீதியான பாதுகாவலர்)

| **விண்ணப்பதாரி** | **வாழ்க்கைத் துணை** |
|---|---|
| 3.1 முழுப் பெயர் :- ...................................... ...................................... | 3.2 முழுப் பெயர் :- ...................................... ...................................... |
| 3.3 முதலெழுத்துக்களுடன் பெயர் :- ...................................... ...................................... | 3.4 முதலெழுத்துக்களுடன் பெயர் :- ...................................... |

3.5 தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ……………………………………………

3.7 தேசிய அடையாள அட்டை இலக்கம்:- ……………………………………………

3.6 இலங்கையரா? :- ……………………………………

3.8 இலங்கையரா? :- ……………………

3.9 சமயம் :- ……………………………………………

3.10 சமயம் :- ……………………………

3.11 நிரந்தர முகவரி :-……………………………

3.12 நிரந்தர முகவரி :-……………………………

3.13 தொலைபேசி இலக்கம் :-..............................

3.14 தொலைபேசி இலக்கம் :- ..............................

3.15 வசிக்கும் நிர்வாக மாவட்டம் :- ……………………………………………………………

3.16 வசிக்கும் நிர்வாக மாவட்டம் :- ……………………………………

3.17 வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு :- ……………………………………………………………

3.18 வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு :- ……………………………………………

3.19 வசிக்கும் கிராம *உத்தியோகத்தர்* பிரிவு :- ……………………………………………………

இலக்கம் :- ……………………………………………

3.20 வசிக்கும் கிராம *உத்தியோகத்தர்* பிரிவு:- ……………………………………………………

இலக்கம் :- ……………………………

04. **விண்ணப்பிக்கும் பாடசாலைகள்** : (இப்பாடசாலையும் உட்பட தமது விருப்பு முன்னுரிமைக்கேற்ப எழுதுதல் வேண்டும்)

| தொடர் இல. | பாடசாலையின் பெயர் | பாடசாலை வகை (தேசிய/மாகாண) | வதிவிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் (மீட்டர்/கி.மீ) |
|---|---|---|---|
| 01. | | | |
| 02. | | | |
| 03. | | | |
| 04. | | | |
| 05. | | | |
| 06. | | | |

(உங்களது பிள்ளை, விண்ணப்பித்த பாடசாலைகளிடையே ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பமொன்றின் போது உங்களால் மேலே குறிப்பிடப்பட்ட முன்னுரிமை ஒழுங்கிற்கு ஏற்ப முன்னுரிமை கூடிய பாடசாலையைப் பெற்றுக் கொடுப்பதோடு தெரிவு செய்யப்பட்டுள்ள ஏனைய பாடசாலைகளின் *பெயர்* பட்டியல்களிலிருந்து நீக்கம் செய்யப்படும்.)

05. விண்ணப்பிக்கும் இப்பாடசாலை தவிர வதிவிடத்துக்கு அண்மித்த பிள்ளையை அனுமதிக்கக்கூடிய வேறு பாடசாலைகள்:

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………………
5. ……………………………………………………………………………………………
6. ……………………………………………………………………………………………
7. ……………………………………………………………………………………………
8. ……………………………………………………………………………………………
9. ……………………………………………………………………………………………
10. ……………………………………………………………………………………………

06. வாக்காளர் இடாப்பில் பதிவு:

(வதிவினை உறுதி செய்து கொள்ள வேண்டிய அருகிலுள்ள அல்லது சகோதர வகைகளுக்கு உரிய பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர், கிராம அலுவலர் பணிமனையில் விபரங்களைப் பெற்று இப் பகுதியை பூரணப்படுத்தி, அதனை தாமே உறுதிப்படுத்துதல் வேண்டும்.)

வருடம் -

வாக்கெடுப்புப் பிரிவு -

கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -

தேர்தல் தொகுதி -

கிராமம்/ வீதி/தோட்டம் -

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

வருடம் -

வாக்கெடுப்புப் பிரிவு -

கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -

தேர்தல் தொகுதி -

கிராமம் /வீதி/ தோட்டம் -

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

வருடம் -

வாக்கெடுப்புப் பிரிவு -

கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -

தேர்தல் தொகுதி -

கிராமம்/ வீதி/ தோட்டம் -

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

வருடம் -

வாக்கெடுப்புப் பிரிவு -

கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -

தேர்தல் தொகுதி -

கிராமம்/ வீதி/ தோட்டம் -

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

வருடம் -

வாக்கெடுப்புப் பிரிவு -

கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் -

தேர்தல் தொகுதி -

கிராமம் /வீதி/ தோட்டம் -

| வீட்டு இல | தொடர் இல | வாக்காளரின் பெயர் (வீட்டிலுள்ள அனைவரும்) |
|---|---|---|
| | | |

மேற்கூறப்பட்ட தகவல்கள் வாக்காளா் இடாப்புக்களுடன் பரீட்சிக்கப்பட்டு என்னால் பிழையின்றி குறிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் உறுதிப் படுத்துகின்றேன்.

.................................................                                        …………………………….
விண்ணப்பதாரியின் ஒப்பம்.                                                                   திகதி

07. கீழ்வரும் பகுதிகளில் தான் விண்ணப்பிக்கும் வகைக்குரிய பகுதியை மாத்திரம் பூரணப்படுத்துக.

| விடயம் | புள்ளிகள் (அலுவலக உபயோகத்திற்கு) |
|---|---|
| 7.1 **பாடசாலைக்கு அண்மித்து வசிப்போரின் பிள்ளைகள்**<br>7.1.1 *வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் அடிப்படை ஆவணம்*:-<br>…………………………………………………………………………………………<br>…………………………………………………………………………………………<br>…………………………………………………………………………………………<br>…………………………………………………………………………………………<br>7.1.2 வதிவினை உறுதி செய்யக்கூடிய மேலதிக ஆவணங்கள் :-<br>…………………………………………………………………………………………<br>…………………………………………………………………………………………<br>…………………………………………………………………………………………<br>…………………………………………………………………………………………<br>7.1.3 வாக்காளா் இடாப்பில் விண்ணப்பதாரி பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்களின் எண்ணிக்கை :- ..........................<br>வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரியின் *வாழ்க்கைத்* துணையின் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்களின் எண்ணிக்கை :- ………………….<br>வாக்காளா் இடாப்பில் சட்டரீதியான பாதுகாவலரின் பெயர் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்களின் எண்ணிக்கை:-...................<br>(விண்ணப்பத்தினை அனுப்பும் வருடத்துக்கு முந்திய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்களுக்கு இது தொடர்புடையதாகும்.)<br>(கட்டாயமாக இல : 06 பூரணப் படுத்தப்படல் வேண்டும்)<br>7.1.4 விண்ணப்பித்த இப்பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மித்த உரிய பிள்ளை அனுமதி பெறக்கூடிய வேறு பாடசாலைகளின் எண்ணிக்கை :- …………………………… | |
| 7.2 **பழைய மாணவர்களின் பிள்ளைகள்:**<br>7.2.1 மாணவராக பாடசாலையில் கற்ற தரங்களின் எண்ணிக்கை :- …………………………………………………………<br>....................தரத்தில் இருந்து .......................... தரம் வரை<br>7.2.2 பாடசாலைக் காலத்தினுள் பெற்றுக் கொண்ட கல்விசார் வெற்றிகள்:-<br>..........................................................................................<br>..........................................................................................<br>7.2.3 பாடசாலைக் காலத்தினுள் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மூலம் பெற்றுக் கொண்ட வெற்றிகள்:-<br>..........................................................................................<br>7.2.4 பழைய மாணவர் சங்க அங்கத்துவம், பாடசாலைக் காலத்தின் பின் பெற்றுக் கொண்டுள்ள கல்விசார் வெற்றிகள், (அதிபரால் அங்கீகரிக்கப்பட்டவை) பாடசாலையின் அபிவிருத்திக்காக வழங்கிய பல்வேறுபட்ட உதவிகள் :-<br>.......................................................................................... | |

7.3 **தற்போது குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் சகோதர/ சகோதரிகள்**

7.3.1 விண்ணப்பதாரியின் பிள்ளையொன்று/ பிள்ளைகள் பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருப்பின்

| பிள்ளையின் பெயர் | வகுப்பும் சேர்வு இலக்கமும் | இப் பாடசாலையில் அனுமதி பெற்ற வகுப்பு | கற்ற வகுப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

7.3.2 பாடசாலையிலுள்ள சகோதர/ சகோதரிகள் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்துள்ள வெற்றிகளும் பாடசாலையின் அபிவிருத்திக்காக விண்ணப்பதாரி வழங்கியுள்ள பல்வேறுபட்ட உதவிகளும் :- ……………………………………………………………..

7.3.3 வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் அடிப்படை ஆவணம் :-……………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

7.3.4

வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரி பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்கள்:- ............................

வாக்காளர் இடாப்பில் விண்ணப்பதாரியின் *வாழ்க்கைத்* துணையின் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்கள் :- …………………………..

வாக்காளர் இடாப்பில் சட்டரீதியான பாதுகாவலரின் பெயர் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருக்கும் வருடங்கள் :-..................

(விண்ணப்பத்தினை அனுப்பும் வருடத்துக்கு முந்திய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்களுக்கு இது தொடர்புடையதாகும்.)
(கட்டாயமாக இல 06 பூரணப்படுத்தப்படல் வேண்டும்.)

7.3.5

விண்ணப்பிக்கும் இப் பாடசாலையை விட தமது வசிப்பிடத்துக்கு அண்மித்த உரிய பிள்ளை அனுமதி பெறக்கூடிய வேறு பாடசாலைகளின் எண்ணிக்கை :-................

| | |
|---|---|
| 7.4 **கல்வியமைச்சின் கீழ் அரச பாடசாலைக் கல்வியில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனங்களில் பணியாற்றுவோரின் பிள்ளைகள் :**<br>7.4.1 குறித்த நிறுவனங்களில் நிரந்தரப் பணியாளராக சேவையாற்றும் பதவியும் சேவைக்காலமும் :- ……………………………………………<br>7.4.2 தற்போது கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றின் தொடர்ச்சியான கஷ்டப் பாடசாலையில் சேவையாற்றும் சேவைக் காலம் :- ………..<br>7.4.3 இதற்கு முன் கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றி இருப்பின் அச்சேவைக் காலம் :- ……………………………<br>7.4.4 பெற்றுக்கொள்ளாத விடுமுறை நாட்கள்:-<br>2020 - ……………….<br>2019 - ……………….<br>2018 - ……………….<br>2017 - ...……………..<br>2016 - ……………….<br>7.4.5 விண்ணப்பித்த பாடசாலையிலேயே சேவையாற்றிக் கொண்டிருப்பின் அப் பாடசாலையில் சேவைக்காலம் :- ……………… ……………………………………………………………………………………………<br>7.4.6 நிரந்தர வதிவிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலைக்குள்ள தூரம் (கி.மீ):- ………<br>7.4.7 வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் அடிப்படை ஆவணம் :- ……………………………………………………<br>7.4.8 *விண்ணப்பிக்கும் பாடசாலையிலிருந்து* தற்போதைய சேவை நிலையத்துக்குள்ள தூரம் **(**கி.மீ**)** :-…………….. | |

| | |
|---|---|
| **7.5 அரச சேவைத் தேவையின் பொருட்டு இடமாற்றம் அல்லது அரச வருடாந்த இடமாற்றம் பெற்று வந்த அலுவலர்களின் பிள்ளைகள்**<br><br>7.5.1 இறுதியாக இடமாற்றம் பெற்று புதிய சேவை நிலையத்தில் பதவி ஏற்ற திகதி :- ..............................<br><br>7.5.2 இடமாற்றத்துடன் தொடர்புடைய புதிய சேவை நிலையத்தின் பெயரும் முகவரியும் :-........................................................................................................................................................................................................................................<br><br>7.5.3 இடமாற்றத்துடன் தொடர்புடைய பழைய சேவை நிலையத்தின் பெயரும் முகவரியும் :- ........................................................................................................................................................................................................................................<br><br>7.5.4 பழைய சேவை நிலையத்தில் கடமையாற்றிய சேவைக்காலம் ................ இருந்து .................... வரை<br><br>7.5.5 முதல் சேவை நிலையத்திற்கும் *மாற்றம் பெற்று*வந்த தற்போதைய சேவை நிலையத்திற்குமான தூரம் (கி.மீ) :- .........<br><br>7.5.6 விண்ணப்பிக்கும் இப் பாடசாலையை விட தமது வசிப்பிடத்துக்கு அண்மித்த உரிய பிள்ளை அனுமதி பெறக்கூடிய வேறு பாடசாலைகளின் எண்ணிக்கை:-.....................<br><br>7.5.7 அரச/ கூட்டுத்தாபன/ நியதிச்சட்டசபை/ அரச வங்கி அலுவலராக சேவைக் காலம்:- ....................................<br><br>7.5.8 பெற்றுக் கொள்ளாத விடுமுறை நாட்கள்:<br>2020 - ..........................<br>2019 - ...........................<br>2018 - ..........................<br>2017 - ..........................<br>2016 - .......................... | |
| 7.6 **உரிய பிள்ளையுடன் வெளிநாட்டில் வசித்துவிட்டு திரும்புவோரின் பிள்ளைகள்**<br>7.6.1 வெளிநாட்டில் இருந்து விட்டு மீண்டும் நாடு திரும்பிய திகதி:- .........<br>7.6.2 பிள்ளையுடன் தொடர்ச்சியாக வெளிநாட்டில் இருந்த கால எல்லை ...............ஆம் திகதி தொடக்கம் ...............ஆம் திகதி வரை<br>7.6.3 வெளிநாடு சென்றதற்கான காரணம் :- ..........................................................................<br>7.6.4 விண்ணப்பிக்கும் இப்பாடசாலையை விட தமது வசிப்பிடத்துக்கு அண்மித்த உரிய பிள்ளை அனுமதி பெறக்கூடிய வேறு பாடசாலைகளின் எண்ணிக்கை:- ....................................................... | |

## 08. உறுதியுரை :

எனது பிள்ளை எந்த அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் அல்லது வேறு பாடசாலையொன்றில் தற்பொழுது கல்வி பயில்வதில்லை என்பதை இதன் மூலம் அறியத் தருகின்றேன். செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டுள்ள முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பில் ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் இல 01 தொடக்கம் இல 12 வரையுள்ள நியதிகளுக்கு உடன்படுகின்றேன். மேலும் மேலேயுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், என்னால் மேலே குறிப்பிடப்பட்ட நிரந்தர வதிவிடம் பற்றியும் ஏனைய தகவல்கள் பற்றியும் திருப்திகரமான அத்தாட்சிகளைச் சமர்ப்பிப்பதற்கு இணங்குகிறேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

என்னால் தரப்பட்ட ஏதாவது விபரங்கள் *போலியானது அல்லது* உண்மையற்றதெனத் தெரிய வந்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை நான் அறிவேன். எனது பிள்ளை பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்ட பின் என்னால் தரப்பட்ட விபரங்கள் உண்மையற்றவை எனத் தெரியவந்தால் எனது பிள்ளையை பாடசாலையிலிருந்து விலக்கி மாகாண கல்விப் பணிப்பாளர் மூலம் பெயர் குறிப்பிடப்படும் அதே பிரதேசத்திலுள்ள வேறொரு பாடசாலையில் சேர்ப்பதற்கு நான் இணங்குகின்றேன்.

திகதி : …………………………......

……………….........…………….

தாய்/ தந்தை/ சட்டரீதியான
பாதுகாவலரின் கையொப்பம்

## முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பான அறிவுறுத்தல்களும் ஆலோசனைகளும்

**1.0** விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்துவதற்கு முன் கீழ்க் காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்

**2.0 அடிப்படைத் தகைமைகள்**

2.1 2022 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 31ஆம் திகதியன்று பிள்ளையின் வயது ஐந்து (05) வருடங்கள் பூரணமாய் இருத்தல் வேண்டும். இதனை உறுதிப்படுத்த பிறப்புச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். பாடசாலையிலுள்ள வெற்றிடங்களுக்கு போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகளுக்கு மாத்திரம் பிள்ளையொன்றுக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லாத போது அதற்குப் பதிலாக பிறந்த திகதியை உறுதிப்படுத்த பிறப்பு, விவாக மற்றும் மரணம் தொடர்பான பதிவாளர் நாயகத்தினால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட மாவட்டப் பதிவாளரினால் வழங்கப்படும் அனுமான வயதுச் சான்றிதழ் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் பின்பு பிறப்புச் சான்றிதழை கட்டாயமாக பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

2.2 2022 ஜனவரி மாதம் 31ஆம் திகதியன்று 06 அல்லது 06 வயதை விடக்கூடிய பிள்ளைகள், 06 வயதுக்கு குறைந்த தகைமைகளையுடைய சகல பிள்ளைகளையும் அனுமதித்த பின்னரே சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**3.0 கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் (அனைத்து வகைகளுக்கும் பொருந்தும்)**

3.1 முதலாம் தரத்தின் சமாந்தர வகுப்பொன்றிற்காக 35 பிள்ளைகள் நேர்முக பரீட்சை மூலமும் 05 பிள்ளைகள் யுத்த நடவடிக்கைப் பணிகளில் ஈடுபட்ட முப்படைகள் மற்றும் பொலிஸ் உறுப்பினர்களின் பிள்ளைகளிலிருந்தும் தெரிவு செய்யப்படுவர். இதன்படி வகுப்பொன்றில் இருக்க வேண்டிய உச்ச மாணவர்களின் எண்ணிக்கை 40 ஆகும்.

3.2 1960 இன் 5 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (சிறப்பு விதிகள்), 1961இன் 8ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (மேலதிக விதிகள்) எனும் சட்ட மூலங்களுக்கு ஏற்ப அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலைகளில் வெற்றிடங்களை நிரப்புகையில் பொறுப்பேற்ற போது குறித்த பாடசாலையில் இருந்த மாணவர் சமய விகிதாசாரம் குறித்து கவனத்திற்கொண்டு மொத்த வெற்றிட எண்ணிக்கை சமய ரீதியாகவும் ஒவ்வொரு வகைகளுக்கேற்பவும் வகுக்கப்படும். ஏதாவது சமயப் பிரிவில் ஒரு வகைக்கு ஒதுக்கப்பட்ட அளவை விட குறைந்த விண்ணப்பதாரிகள் இருக்குமிடத்து அவ்வெற்றிடங்கள் அச் சமயத்துக்குரிய மற்றைய வகைகளிடையே விகிதாசாரத்திற்கு ஏற்ப பகிர்ந்து கொள்ளப்படும். ஏதாவது ஒரு சமயத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அல்லது குறைவாக இருக்குமிடத்து அவை விகிதாசாரத்திற்கு ஏற்ப மற்றைய சமயப் பிரிவினரிடையே பகிர்ந்து கொள்ள ஏற்பாடு செய்யப்படும்.

3.3 பெற்றோரின் வதிவிடம் ஒரே இடமாக இல்லாத பட்சத்தில், அவர்கள் சட்டப்படி பிரியாதவர்களாயின் அவர்கள் சட்டப்படி பிரிவதற்காக நீதிமன்ற செயற்பாடுகளை ஆரம்பித்தமையை ஆவணங்கள் மூலம் நிரூபிப்பின் விண்ணப்பப் பத்திரத்தைச் சமர்ப்பித்தவரின் (தாய்/ தந்தை) வதிவிடம் பிள்ளையின் வதிவிடமாகக் கொள்ளப்படும்.

3.4 நீதிமன்ற தீர்ப்பொன்றின் மூலம் சட்டரீதியாக நிரந்தரமாக வளர்ப்புப் பிள்ளையாக வளர்க்க நியமிக்கப்பட்ட ஒருவரை தாய்/ தந்தையாக ஏற்றுக்கொள்ள முடியும். அனாதை இல்லங்களில் வசிக்கும் பிள்ளைகளின் சட்டரீதியான பாதுகாவலராக இல்லப் பொறுப்பாளர் கருதப்படுவார். சட்டரீதியாக பிள்ளையை வளர்க்கும் நபர் மூலம் அது தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பினை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன் பெற்றிருத்தல் வேண்டும். தாய், தந்தை இருவரும் உயிருடன் இல்லாதிருக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் பிள்ளையை பராமரிக்கும் நபருக்கு அப்பிள்ளையின் பாதுகாவலராக விண்ணப்பிக்க முடியும்.

3.5 பிள்ளையின் தாயும் தந்தையும் வெளிநாடு சென்றிருக்கும் சந்தர்ப்பமொன்றின் போது அல்லது பெற்றோரில் ஒருவர் உயிரிழந்து மற்றவர் வெளிநாடு சென்றிருக்கும் போது சட்டரீதியாக பாதுகாவலராக நியமிக்கப்பட்டிராதிருப்பினும் தற்காலிகமாக பிள்ளையின் பொறுப்பினைக் கொண்டிருப்பவர் பிள்ளையின் பெற்றோரின் பெயரில் விண்ணப்பிக்க

முடியும். எனினும் மேற்கூறப்பட்டதற்கேற்ப பிள்ளையின் பெற்றோரின் ஆவணங்களே கருத்திற் கொள்ளப்படும். அத்தோடு பிள்ளையின் தாய்/ தந்தை வெளிநாட்டிலிருப்பதை, உயிருடன் இல்லாதிருப்பதை உரிய ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும்.

3.6 பாடசாலைக்கு விண்ணப்பிக்கும் பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் பாடசாலைக்கு ஊட்டற் பிரதேசத்தினுள் வசிக்க வேண்டியதுடன், உரிய கிராமசேவகர் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் ஊட்டற பிரதேசம் என்பது பாடசாலை அமைந்துள்ள நிர்வாக மாவட்டம் மற்றும் நிர்வாக மாவட்ட எல்லைக்குள் ஏதேனும் பாடசாலையொன்று அமைந்துள்ள சந்தர்ப்பத்தில் எல்லைக்கண்மையிலுள்ள நிர்வாக மாவட்டத்தின் அண்மித்த பிரதேச செயலாளர் பிரிவுமாகும். (பழைய மாணவர்களுடைய பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்காக இந்த நிபந்தனை பொருந்தாது.)

## 4.0 விண்ணப்பங்களை அனுப்புவதற்கான நடைமுறைகள்

4.1 யுத்த நடவடிக்கை கடமைகளுக்காக வழங்கப்படும் விசேட சலுகையின் கீழ் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுமதிக்க விரும்பும் யுத்தக் கடமைகளில் ஈடுபட்ட முப்படைகள் மற்றும் பொலிஸ் உறுப்பினர்கள் உரிய சேவை நலன்புரிப் பணிப்பாளர் மூலம் விண்ணப்பப் படிவங்களை பெற்று ஒழுங்காகப் பூரணப்படுத்தி தமது நிறுவனத் தலைவர் மூலம் உரிய நலன்புரிப் பணிப்பாளருக்கு குறித்த தினத்திற்கு முன் அனுப்புதல் வேண்டும்.

4.2 தமது பிள்ளைக்காக பாடசாலையொன்றுக்கு விண்ணப்பிக்கத் தகைமை பெறும் ஏனைய அனைத்துப் பெற்றோர்கள்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் உரிய பாடசாலையின் அதிபருக்கு 2021 ஜுன் 30 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணபத்தினுடன் சுய விலாசமிடப்பட்ட பதிவுத் தபாலுக்கான முத்திரை ஒட்டிய கடித உறை ஒன்றையும் **பிள்ளையை அனுமதிப்பதற்கு தேவையான தகைமை பற்றி தானே உறுதிப்படுத்திய ஆவணங்களின் பிரதிகளையும் இணைத்து,** தானே உறுதிப்படுத்திய, தாம் விண்ணப்பிக்கும் வகைக்குரிய அனைத்து ஆவணங்களதும் பிரதிகளும் அவற்றினை சான்றுப்படுத்துவதற்கு சத்தியக்கடதாசி ஒன்றுடன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். வெற்றிட எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையில் விண்ணப்பங்களைப் பெறும் பாடசாலைகளுக்கு மாத்திரம் இவ் விண்ணப்பங்களை நேரடியாகச் சமர்ப்பிக்க முடியும். நேரடியாகச் சமர்ப்பிப்பதாயின் பாடசாலையால் அவ் விண்ணபத்தினை பெற்றுக் கொண்டமைக்கான பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4.3 யுத்த நடவடிக்கைப் பணிகளில் ஈடுபட்ட முப்படைகளினதும் பொலிஸ் உறுப்பினர்களினதும் பிள்ளைகள் நேரடியாக பாடசாலைக்கு விண்ணப்பிக்க தகைமை பெற்று இருப்பின் உரிய பாடசாலையின் அதிபருக்கு பொதுவான விதிமுறைகளின் கீழ் விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

4.4 பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் ஒரு பாடசாலையில் ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளுக்கு விண்ணப்பிக்க தகைமை பெற்றிருப்பின் அந்த ஒவ்வொரு வகைக்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வகை தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். (விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி உரிய வகையின் கீழ் தகுதியுடையவராயிருத்தல் வேண்டும்)

4.5 அனைத்து விண்ணப்பதாரிகளும் **குறைந்த பட்சம் தமக்கு அண்மித்த மாகாணப் பாடசாலைகள் 03 உட்பட பாடசாலைகள் 06 இற்காவது விண்ணப்பித்தல் கட்டாயமாகும். பாடசாலைகளைப் பெயரிடும் போது அனைத்து விண்ணப்பங்களிலும் அப்பாடசாலைகளின் விருப்பு முன்னுரிமைக்கேற்ப குறிப்பிடுதல் வேண்டும்.** அத்தோடு 06 பாடசாலைகளுக்கு விண்ணப்பித்து அப்பாடசாலைகளினால் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தும் அதில் கலந்து கொள்ளாத விண்ணப்பதாரர்களும் இவ்வாறு விண்ணப்பிக்காத பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர்களும் பாடசாலை ஒன்று கிடைக்காதவிடத்து வலயக் கல்விப் பணிப்பாளருக்கு மேன் முறையீடு ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். இம் மேன்முறையீடு கருத்திற் கொள்ளப்பட்டு அவர் மூலம் பெயர் குறிப்பிடப்படும் பாடசாலைக்கு தமது பிள்ளையினை அனுமதித்தல் வேண்டும்.

4.6 இரு போதனா மொழிகளைக் (சிங்களம், தமிழ்) கொண்ட பாடசாலைகளின் இரு மொழி மூலத்திற்கும் விண்ணப்பிக்க விரும்பினால் மொழிமூலங்கள் இரண்டிற்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களை அனுப்பமுடியும். எனினும் ஒரு மொழிமூலத்திற்கு பாடசாலைக்குத் தெரிவானதன் பின்னர் அம்மொழிமூலத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

## 5.0 தெரிவு செய்வதற்கான நடைமுறைகள்

5.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினம் வரை கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை பாடசாலையின் முதலாம் தரத்திற்கு பாடசாலை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுமதி வழங்கும் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு மேற்படின் மாத்திரமே நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுகள் நடாத்தப்படும்.

5.2 நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் விண்ணப்பப் படிவங்கள் பரீட்சிக்கப்பட்டு கீழே தரப்பட்டிருக்கும் புள்ளியிடும் முறைக்கேற்ப புள்ளிகள் வழங்கப்படும். இதன் பின் அப் புள்ளிகள் முன்னுரிமைக்கேற்ப பாடசாலைக்கு நேர்முகப்பரீட்சையின் மூலம் அனுமதிக்கக் கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கையைப் போன்று 4 மடங்கு தெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சையொன்றுக்கு தோற்றுமாறு உரிய விண்ணப்பதாரிகள் அழைக்கப்படுவர்.

5.3 விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படும் வெற்றிட எண்ணிக்கையைப் போல் நான்கு மடங்கினுள் அடங்காவிடின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள். எனினும் இது தொடர்பாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாமைக்கான காரணம் தெளிவாக விளக்கப்பட்டு எழுத்து மூலம் நேர்முகப் பரீட்சை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு அதிபர் மூலம் உரிய விண்ணப்பதாரர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

5.4 தகைமை இருந்தும் தமது பிள்ளையின் விண்ணப்பம் 4 மடங்கிற்குள் உட்படுத்தப்படாமல் நிராகரிக்கப்பட்டிருப்பின் மாத்திரம் உரிய ஆவணங்களுடன் (முன்னைய விண்ணப்பத்துடன் அனுப்பப்பட்ட ஆவணங்கள்) மீண்டும் விண்ணப்பமொன்றினை, புள்ளிகளை பெற்றுக் கொள்ளக்கூடிய முறையை தர்க்க ரீதியாக விபரித்து நிராகரிக்கப்பட்டதற்கான கடிதத்தின் பிரதியொன்றுடன் பாடசாலையின் அதிபருக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் ''முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் மீண்டும் கருத்திற் கொள்ளல்''எனக் குறிப்பிட்டு நிராகரிப்புக் கடிதம் கிடைத்து ஒரு வாரத்தினுள் அனுப்புதல் வேண்டும்.

## 6.0 தெரிவு செய்வதற்காக பயன்படுத்தப்படும் நடைமுறைகள்

(அ) பாடசாலையொன்றில் முதலாம் தரத்தில் காணப்படும் வெற்றிடங்களில் பாடசாலையின் மூலம் தெரிவு செய்யப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை கீழே காட்டப்படும் விகிதாசாரத்திற்கேற்ப கீழ்வரும் வகைகளுக்குரிய பிள்ளைகளிடையே இருந்து தெரிவு செய்யப்படும்.

I. பாடசாலைக்கு அண்மித்து வசிப்போரின் பிள்ளைகள் - 50%

II. குறித்த பாடசாலையில் பழைய மாணவர்களாக உள்ள பெற்றோரின் பிள்ளைகள் - 25%

III. தற்போது குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் சகோதர/ சகோதரிகள் - 15%

IV. கல்வியமைச்சின் கீழ் அரச பாடசாலைக் கல்வியில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனமொன்றில் பணியாற்றுவோரின் பிள்ளைகள் - 05%

V. அரச சேவைத் தேவையின் பொருட்டு இடமாற்றம் பெற்ற அரச/ கூட்டுத்தாபன/ நியதிச் சட்டசபை/ அரச வங்கி அலுவலர்களின் பிள்ளைகள் - 04%

VI. பிள்ளையுடன் வெளிநாட்டில் வசித்து விட்டு வந்தவர்களின் பிள்ளைகள் - 01%

(ஆ) ஒவ்வொரு வகையின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் முறைக்கேற்ப தெரிவு செய்வதற்காக நேர்முகப்பரீட்சைக் குழுவின் மூலம் புள்ளிகள் பெற்றுக் கொடுக்கப்படும். இங்கு பெற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் கூடிய புள்ளிகள் 100 ஆகும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் குறைந்தது ஒரு ஆவணமாவது சட்டவிரோதமான ஆவணமாக இருப்பின் அக் காரணத்திற்காகவே அவ் விண்ணப்பத்தினை நேர்முகப் பரீட்சைக்குழுவின் மூலம் நிராகரிக்க முடியும்.

(ஈ) வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதை குறித்துக் கொள்வதற்காக விண்ணப்பப் படிவத்தில் பகுதியொன்று தரப்பட்டுள்ளது. தமது வதிவினை உறுதிப்படுத்துவதற்காக வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ள அண்மித்த மற்றும் சகோதர வகைக்குரிய பெற்றோர்கள்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் கிராம அலுவலர் காரியாலயத்தில் விபரங்களைப் பெற்று இப்பகுதியைப் பூரணப்படுத்தி தானே சான்றுப்படுத்துதல் வேண்டும்.

(உ) வதிவிடத்திலிருந்து கோரப்படும் பாடசாலைக்கு உள்ள அண்மைத்தன்மையை கவனத்திற் கொள்ளும் போது விண்ணப்பதாரியின் வீட்டை (பிரதான வாயில்) மையமாகக் கொண்டு கோரப்படும் பாடசாலையின் பிரதான அலுவலகத்துக்கு (ஆரம்பப் பரிவு பிரதான பாடசாலையிலிருந்து புறம்பான வேறு இடத்தில் இருக்குமாயின் அதன் அலுவலகத்துக்கு) உள்ள (வான்) தூரத்தை ஆரையாக கொண்டு வரையப்படுகின்ற வட்டத்தின் எல்லைக்குள் உள்ளடங்கும் பாடசாலைகளுக்காக புள்ளிகள் குறைக்கப்படும். இதன் போது பிரதான பாடசாலையை விடுத்து புறம்பான இடத்தில் ஆரம்பப் பரிவு அமைந்துள்ள பாடசாலை தொடர்பாக புள்ளிகள் குறைக்கப்படுவது, ஆரம்பப் பிரிவு அமைந்துள்ள இடத்துக்கே என்பதோடு இடைநிலை பிரிவு அமைந்துள்ள இடத்துக்கு அல்ல.

**யாதும் பாடசாலை மேற்குறிப்பிட்ட வட்டத்தின் எல்லைக்குள் அமைந்திருந்தாலும் ஆறு, குடா, ஈரநிலம், பாதுகாக்கப்பட்ட வனம் முதலிய இயற்கைத் தடை அல்லது அதிவேக பாதை காணப்படும் சந்தர்ப்பங்களில் மட்டும் வீட்டிலிருந்து அந்த பாடசாலைக்கு பயணிக்கக்கூடிய குறுகிய பாதைத் தூரம் கோரப்படும். பாடசாலைக்கு உள்ள குறுகிய பாதைத் தூரத்தை விட அதிகமாயின் புள்ளிகள் குறைக்கப்படாது. அதன் போது பெற்றோர் ஏற்றுக்கொள்ளத்தக்க சாட்சியங்கள் சகிதம் பாதை வரிப்படத்தை நேர்முக பரீட்சை சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும்.**

மேற்குறித்த சந்தர்ப்பத்தில் அண்மைத்தன்மையை அளவிடுவதற்காக அரச நிலவளவை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 1:1000 பரிமாண வரைபடம் பாவிக்கப்படுவதோடு, சிக்கலான நிலையில் கூகுள் வரைபடத்துடன் (Google Map) ஒப்பிட்டு தீர்மானம் எடுக்கப்படும்.

(ஊ) வதிவினை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் விண்ணப்பத்தினைச் சமரப்பிக்கும் போது வசிக்கும் வதிவிடத்திற்கு அமைவாகவே இருத்தல் வேண்டும்.

**6.1 பாடசாலைக்கு அண்மித்து வசிப்போரின் பிள்ளைகள் - 50%**

(அ) இவ்வகையின் கீழ் ஊட்டப் பிரதேசத்தினுள் (முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பான அறிவுறுத்தல்களும் ஆலோசனைகளும் எனும் தலைப்பின் 3.6 உப பிரிவின்படி) வசிக்கும் அனைவருக்கும் விண்ணப்பிக்க முடியும். இங்கு வதிவு மிக அத்தியாவசியமாவதோடு, அதுகுறித்து பௌதீக ரீதியாகவும் எழுத்துமூலமாகவும் அத்தாட்சிப்படுத்தல் கட்டாயமாகும்.

(ஆ) இங்கு தெரிவானது கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப நடைபெறும்.

**புள்ளி வழங்கும் முறை**

**I. வதிவினை உறுதிப்படுத்துவதற்கா*ன அடிப்படை மற்றும் மேலதிக ஆவணங்கள்***

மேற்படி ஆவணங்கள் உரிய நபரின் பெயரில் சொந்தமாக்கப்பட்டு, விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து முந்திய 5 வருடங்கள் அல்லது அதைவிட அதிகமாகவோ பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளும், 5 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 4 வருடங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 80% மும், 4 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 3 வருடங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 60% மும், 3 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 2 வருடங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 40% மும், 2 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 1 வருடம் வரை பெற்றிருந்தால்

மொத்தப்புள்ளிகளில் 20% மும், 1 ஆண்டுக்குக் குறைவாகவோ அல்லது 6 மாதங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 10% மும், 6 மாதங்களுக்குக் குறைவாகப் பெற்றிருந்தால் மொத்தப் புள்ளியில் 05% மும் என்றவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

(அ) ***வதிவினை உறுதிப்படுத்தும் அடிப்படை ஆவணங்கள்***

- ✓ உரித்து உறுதி
- ✓ தலைப்புப்பதிவு சான்றிதழ் (விம்சவிய)
- ✓ அன்பளிப்பு உறுதி
- ✓ கொடுப்பனவுப் பத்திரம்
- ✓ அரசாங்க வழங்கல் பத்திரம் (உரிமையாளர் இறந்திருந்தால் விண்ணப்பதாரி/ வாழ்க்கைத் துணை, பின்னுரித்தாளியாகியாக பெயரிடப்பட்டிருப்பதோடு, சம்பந்தப்பட்ட உரித்துடையவர் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்)
- ✓ விகாரை, தேவாலயம் தொடர்பான சட்டமூலத்தின் கீழ் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகம் மூலம் வழங்கப்பட்டுள்ள குத்தகை உறுதிப் பத்திரம் அல்லது பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகம் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட உரிய விகாராதிபதி மூலம் வழங்கப்பெற்ற சான்றுப்பத்திரம்.
- ✓ வரலாறு மூலம் உறுதிப்படுத்தப்பட்டு 10 வருடத்தை விட அதிக காலத்தைக் கொண்ட வெளியிடுகைப் பத்திரம்
- ✓ தவணைக் கொடுப்பனவு முறையின் கீழ் விலைக்கு எடுத்துள்ள வீட்டு ஆவணம் (உரிமையாளருடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தப் பத்திரமும் கொடுப்பனவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டுகளும்)

  (உரித்துறுதி மற்றும் அன்பளிப்பு உறுதி தொடர்பாக வெளியிடுகைப் பத்திரம் எழுதப்பட்டிருந்தால் அவ் வெளியிடுகைப் பத்திரம் 10 வருடங்கள் அல்லது அதை விடக் கூடிய காலம் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.)

- **விண்ணப்பதாரியின்/ வாழ்க்கைத் துணையின் பெயருக்கு வதிவிடத்தின் உரிமை இருந்தால் - 20 புள்ளிகள்**

- **விண்ணப்பதாரியின்/ வாழ்க்கைத் துணையின் தாய்/ தந்தையின் பெயரில் வதிவிடத்தின் உரிமை இருந்தால் – 15 புள்ளிகள்**

உரிய 05 வருட காலப்பகுதியினுள் விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின் தாய்/ தந்தையின் பெயரிலுள்ள உறுதி விண்ணப்பதாரி அல்லது வாழ்க்கைத்துணைக்கு உரிமை மாற்றப்பட்டிருப்பின் உரிய இரு காலங்களும் பரிசீல்க்கப்பட்டே புள்ளிகள் வழங்கப்படும்.

(உரிமையானது வேறொருவரின் பெயரில் இருப்பின் இப்புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

அவசியமேற்படின் வரலாற்றுப் பதிவு அல்லது இரண்டாம் பிரதி பரீட்சிக்கப்பட்டு உரிமை உறுதிப்படுத்திக் கொள்ளப்படும்.

- ✓ விண்ணப்பதாரியின்/ வாழ்க்கைத் துணையின் பெயரில் மாத்திரமுள்ள தொடர்ச்சியாக பதிவு செய்யப்பட்ட வாடகை உறுதிப்பத்திரம் **(தேவையேற்படின் குத்தகை வழங்கியவரின் உரிமை தொடர்பாக வரலாறு ஊடாக உறுதிப்படுத்தப்படுவதோடு குத்தகை உறுதி குறைந்தது விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து எஞ்சிய 1 வருடத்திற்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.** விண்ணப்பதாரியின்/ வழ்க்கைத் துணையின் பெயரில் மாத்திரமுள்ள, அரச உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிப்பதற்கான ஆவணம் (திணைக்கள தலைவரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்) (பிரம்மச்சாரிகளுக்கான உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிப்போர் இப்புள்ளிகளுக்கான உரிமைக்காக சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்)

வீட்டு வாடகை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வாடகை வீட்டாளர்கள் என உறுதிப்படுத்தப்படும் ஆவணங்கள் - 10 புள்ளிகள்

உரிய 05 வருட காலப்பகுதியினுள் விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின் பதிவு செய்யப்பட்ட வாடகை உறுதிப்பத்திரத்தின் உரித்தாளியாயிருந்து அதன் பின்னர் அவ் உரிமையானது நிரந்தர உறுதியொன்றாகத் தமக்கு மாற்றப்பட்டதாயின் உரிய இரு காலங்களும் பரிசீல்க்கப்பட்டே புள்ளிகள் வழங்கப்படும்.

(வாடகை உறுதிப் பத்திரத்திற்கு வெளியிடுகைப் பத்திரம் எழுதப்பட்டிருந்தால் அவ் வெளியிடுகைப் பத்திரம் 10 வருடங்கள் அல்லது அதை விடக் கூடிய காலம் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)

- ✓ விண்ணப்பதாரி/ வாழ்க்கைத்துணை குறித்த 10 வருடங்களைவிட அதிககாலம் அரச காணியொன்றில் (உரிய முகவரியில்) வசிப்பவராயின் உரிய பிரதேசத்தின் மாநகர ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மூலம் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ் (உரிமையானது வேறொருவரின் பெயரில் இருப்பின் இப்புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.) – 05 புள்ளிகள்

- ✓ **ஏனைய ஏற்றுக் கொள்ளப்படும் ஆவணங்கள் - 04 புள்ளிகள்**

வசிப்பிடம் தொடர்பான மேலே கூறப்பட்டிருக்கும் ஆவணங்கள் அல்லாத ஆனால், விண்ணப்பதாரி/ வாழ்க்கைத் துணைக்குரிய முகவரியில் நிரந்தர வதிவைக் கொண்டிருப்பாரானால், விண்ணப்ப இறுதித்திகதியன்றுக்கு முந்திய 6 வருடங்கள் அல்லது அதைவிட கூடிய காலம், வதிவை உறுதிப்படுத்தும் ஆவணம் தொடர்பாக, 04 ஆவணங்களிற்கு 01 புள்ளி அல்லது விண்ணப்பதாரியின்/ வாழ்க்கைத் துணையின் தாய்/ தந்தையின் பெயரில் இருப்பின் 0.5 புள்ளி வீதமும் வழங்கப்படும்.

மின் கட்டணப்பட்டியல், நீர் கட்டணப்பட்டியல், வரி செலுத்தும் பற்றுச்சீட்டு, ஏக்கர் வரிப் பத்திரம், அடையாள அட்டை/ வாழ்க்கைத் துணையுடைய பிறப்புச் சான்றிதழ்.

மேற்படி ஆவணங்கள் கட்டாயமாக முந்திய 6 வருடங்களுக்கு அல்லது அதைவிட அதிக காலத்துக்குரியதாக இருப்பதோடு அந்த ஆவணங்களில் குறைந்தது 03 ஆவணங்களாவது இருந்தால் மட்டுமே இப்புள்ளிகள் வழங்கப்படும்.

குறித்த 6 வருட காலத்தினுள் விண்ணப்பதாரியின்/ வழ்க்கைத் துணையின் தாய்/ தந்தையின் பெயரில் செலுத்தப்பட் கட்டணப் பட்டியல்கள் பின்னர் விண்ணப்பதாரியின்/ வழ்க்கைத் துணையின் பெயருக்கு மாற்றப்பட்டிருப்பின் உரிய இரு காலங்களும் பரிசீலிக்கப்பட்டே புள்ளிகள் வழங்கப்படும்.

- ✓ வதிவிடம் உரிதிப்படுத்தப்படுவதற்கு மேற்காட்டியுள்ள யாதேனும் வதிவிடம் உறுதிப்படுத்தப்படுவதற்கு மேற்காட்டப்பட்ட யாதேனும் ஆவணத்தை முன்வைக்க முடியாத என்றாலும் யாதேனும் அண்மித்த பாடசாலைக்காக புள்ளி வெட்டப்படாத ,விண்ணப்பதாரர்/ வாழ்க்கைத் துணைக்கு உரிய முகவரியில் முந்திய 5 வருடத்துக்கு வாக்காளர் பதிவு உள்ள, விண்ணப்பதாரர்/வாழ்க்கைத்துணை பிறந்தது தொடக்கம் உரிய இடத்தில் வதிவிலிருப்பது உங்களுக்கு உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடியதாக இருக்குமாயின் (பிறப்புச் சான்றிதழ், விடுகை சான்றிதழ் …… முதலியன ஊடாக) திருமணமான பின் இதுவரை விண்ணப்பிக்கும் முகவரியில் வதிவிலிருப்பது உறுதிப்படுத்தப்படும் விண்ணப்பதாரருக்கு –புள்ளி 15.

(உச்சப 20 புள்ளிகள்)

"இந்த வகையின் கீழ் மேற்குறித்த விடயங்களுக்குரிய வதிவை உறுதி செய்வதற்காக உரித்தான புள்ளியை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரருக்கு மட்டும் இதற்கு பின்னர் வரும் பாகங்களுக்கு புள்ளிகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்."

### ஆ) வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் மேலதிகள ஆவணங்கள்

விண்ணப்பதாரி அல்லது வாழ்க்கைத் துணையின் பெயரிலுள்ள ஒரு ஆவணத்திற்கு 1 புள்ளி வீதம் கீழ்வரும் ஆவணங்களில் ஏதேனும் 05 ஆவணங்களுக்கு - 05 புள்ளிகள்

தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்/ நிலையான தொலைபேசி கட்டணப்பட்டியல் (கம்பியுடன்)/ பாடசாலை விடுகைப் பத்திரம்/ விவாகப் பதிவுச் சான்றிதழ்/ ஆயுட் காப்புறுதி உறுதிப்பத்திரம்/ பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ்/ வங்கிக் கணக்குப் புத்தகம்/ வாகனப் பதிவுச் சான்றிதழ்/ வாகன வருமானவரிப் பத்திரம்/ வாகன காப்புறுதிச் சான்றிதழ்

விடுதி மின் கட்டணப் பட்டியல்/ நீர் கட்டணப் பட்டியல்/ வரிச் சான்றிதழ்/ ஏக்கர் வரிப்பத்திரம் வதிவினை உறுதிப்படுத்தும் பிரதான ஆவணத்தின்கீழ் வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணமொன்றாகக் கருதி புள்ளி வழங்க முடியாதவிடத்து மாத்திரம் வதிவினை உறுதிப்படுத்தும் மேலதிக ஆவணமாகக் கருத்திற் கொள்ளப்படும்.

(உச்சப் 5 புள்ளிகள்)

## II. வதிவினை உறுதிப்படுத்துவதற்கான வாக்காளர் இடாப்பின் பதிவு

வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை குறிப்பதற்கு விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள பகுதி (இல – 06) பூரணப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

அ) வாக்காளர் இடாப்பில் பதிவிற்காக புள்ளிகள் வழங்கும் போது விண்ணப்பிக்கும் வருடத்திற்கு முந்தய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்கள் (2020 – 2016) கவனத்திற் கொள்ளப்படும்.

அட்டவணை இல (I) வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளமைக்கு புள்ளிகள் வழங்கல்

| | விபரம் | புள்ளிகள் |
|---|---|---|
| i. | தாய் மற்றும் தந்தை இருவரினதும்/ சட்டரீதியான பாதுகாவலரின் பெயர் 05 வருடங்களுக்கு பதிவு செய்யப்பட்டிருத்தல் **அல்லது** தாய்/தந்தை பெயர் 5 வருடத்துக்கும், திருமணம் பதிவு செய்யப்பட்ட வருடம் உள்ளிட்ட வாழ்க்கைத்துணையின் பெயர் வாக்காளர் பதிவேட்டில் உள்ளிடப்பட விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தால் மற்றும் அதற்கு மேலும் தொடர்ச்சியாக 04 வருடங்கள் வாழ்க்கைத்துணையின் பெயர் வாக்காளர் பெயர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டிருப்பின் | 25 |
| ii. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 04 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 22.5 |
| iii. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 03 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 20 |
| iv. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 02 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 17.5 |
| v. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது | 15 |

| | | |
|---|---|---|
| | 01 வருடங்கள் பதிவாகியிருப்பின் | |
| vi. | தாய்/ தந்தையின் பெயர் மாத்திரம் 05 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 12.5 |

குறிப்பு :- ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு 2.5 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டு மேற்காட்டப்பட்ட புள்ளி வழங்கும் முறை தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி புள்ளி வழங்கும் அட்டவணையினுள் அடங்காத சந்தர்ப்பத்தில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள காலத்திற்கு ஒருவருக்கு 2.5 புள்ளிகள் வீதம் புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

சட்டரீதியான பாதுகாவலர் தாய், தந்தை இருவருமெனக் கருதப்படுவதனால் தாய், தந்தை ஆகிய இருவரினதும் பதிவு வருடங்களின் எண்ணிக்கைக்கேற்ப கிடைக்கும் புள்ளிகள் (அதாவது வருடம் ஒன்றிற்கு 05 புள்ளிகள்) சட்ட ரீதியான பாதுகாவலருக்கு வழங்குதல் வேண்டும்.

**(உச்சப் புள்ளிகள் - 25)**

(ஆ) இதே போன்று முன் வருடங்களில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த விண்ணப்பதாரரின் துணை வெளிநாடு சென்றிருப்பின் அல்லது இறந்து இருப்பின் அல்லது சட்டரீதியாக விவாகரத்து பெற்றிருப்பின் உரிய ஆவணங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு இருவரும் இருப்பதாக கருதி புள்ளிகள் வழங்கப்படும்.

(இ) தற்போது வசிக்கும் இடத்தின் ஆவணங்களுக்கு ஏற்பவே வதிவிற்கான புள்ளிகள் வழங்கப்படும். எனினும் தற்போது வசிக்கும் இடத்தில் வதிவதற்கு முன்பு ஊட்டற் பிரதேசத்தினுள் வேறோர் இடத்தில் வசித்த விண்ணப்பதாரி ஒருவர் தமது குறைந்தபட்ச ஐந்து வருட வதிவுக்காலத்தினை உறுதிப்படுத்துவதற்காக வாக்காளர் பதிவு அட்டவணைகள் இரண்டு இடத்திற்குமாகச் சமர்ப்பிக்கும் போது, அந்த இரு இடத்திலும் விண்ணப்பிக்கும் பாடசாலைக்கு மிக அண்மையிலுள்ள உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய பாடசாலைகள், ஒரே பாடசாலைகளாக இருந்தால் மாத்திரம் இரு இடங்களிலிருந்தும் சமர்ப்பிக்கப்பட்ட வாக்காளர் அட்டவணைகள் தற்போதைய வசிப்பிடத்தின் வாக்காளர் அட்டவணைகளாகக் கருத்திற்கொள்ளப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்.

ஈ) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்திகதியிலிருந்து முந்திய 05 வருடங்களுக்குள் செய்யப்பட்ட அரசாங்க அபிவிருத்தித் திட்டங்கள் அல்லது அபிவிருத்திப் பிரேரணைகளுக்காக, சில பிரதேசங்களின் குடியிருப்பாளர்கள் அப் பிரதேசங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வேறு பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது மேற்படி அரசாங்க அபிவிருத்தி வேலைகள் காரணமாக அப்புறப்படுத்தப்பட்ட குடியிருப்பாளர்கள் அரசாங்கத்தின் நட்டஈட்டினை பெற்று வேறு பகுதிகளுக்கு நிரந்தரமாக குடியேறியுள்ள வேளையில், அவர்களின் பிள்ளைகளை பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கு முந்திய மற்றும் தற்போதைய வதிவிடங்கள் இரண்டுக்குமுரிய முன்வைக்கப்பட்ட ஆவணங்கள், ஒரே இடத்துக்குரிய ஆவணமாக கவனிக்கப்பட்டு உரிய நியதிகளின் படி புள்ளிகள் வழங்கப்படவேண்டும்.

### III. வசிப்பிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள அண்மைத்தூரம்

விண்ணப்பதாரியின் வதிவு உறுதிப்படுத்தப்படின் மாத்திரம் அவரால் தனது தற்போதைய வசிப்பிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலையை விட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இல்லாவிடின் வழங்கப்படும் உச்ச புள்ளிகள் பெற்றுத் தரப்படும். விண்ணப்பிக்கும் பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மையில் பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இருப்பின் உச்சப் புள்ளிகளிலிருந்து அண்மித்த ஒரு பாடசாலைக்கு 05 புள்ளிகள் வீதம் குறைக்கப்படும்.

(உரிய பிள்ளைக்கு ஆரம்பப் பிரிவுடன் கூடிய அனுமதி பெறக்கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் என்று கருதப்படுவது அப்பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய தேவையான போதனா மொழியைக் கொண்டதும், தமக்கு உரிய பெண்கள்/ ஆண்கள் பாடசாலை அல்லது கலவன் பாடசாலை என்பதும் உரிய பிள்ளையின் சமயத்துக்காக 10% அல்லது அதற்கு மேலதிகமான விகிதாசாரத்தை அனுமதிக்கும் அரச பாடசாலைகளாகும்.)

**(உச்சப் புள்ளிகள் - 50)**

இவ்வகையின் கீழ் விண்ணப்பதாரியின் வதிவு உறுதிப்படுத்தப்படாவிடின் வழங்கப்பட்ட புள்ளிகளை நீக்க முடியும்.

**6.2 குறித்த பாடசாலையில் பழைய மாணவர்களாக உள்ள பெற்றோரின் பிள்ளைகள் - 25%**

(அ) இவ் வகையின் கீழ் குறித்த பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்/ மாணவியரான பிள்ளையின் தாய்/ தந்தை/ சட்டரீதியான பாதுகாவலருக்கு விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) இடைநிலைப் பாடசாலைகள் எண்ணக்கருவின் கீழ் தாய்ப் பாடசாலையிலிருந்து ஆரம்பப் பிரிவு வேறொரு பாடசாலையாக பிரிக்கப்பட்டு நடத்தப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு வேறாக்கப்பட்ட ஆண்டிலிருந்து இடைநிலைப் பாடசாலையின் 6ம் தரத்திலிருந்து கல்வி கற்கும் மாணவர் மற்றும் அதேவேளை இடைநிலைப் பாடசாலையிலிருந்து வெளியேறிய பழைய மாணவர் உரிய ஆரம்பப் பாடசாலையின் பழைய மாணவர்களாகக் கருதப்பட வேண்டும்.

(இ) இங்கு தெரிவானது கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப நடைபெறும்.

**புள்ளி வழங்கும் முறை**

I. விண்ணப்பதாரி பாடசாலையில் கல்வி கற்ற தரமொன்றுக்கு (தரமொன்றில் மீண்டும் தங்கியிருப்பின் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது) 02 புள்ளிகள் வீதம்

**(உச்சப் புள்ளிகள் - 26)**

II. பாடசாலைக் காலத்தினுள் விண்ணப்பதாரி பெற்றுக் கொண்ட கல்வி சார் வெற்றிகள்.

**(உச்சப் புள்ளிகள் - 25)**

III. பாடசாலைக் காலத்தினுள் விண்ணப்பதாரி இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் மூலம் பெற்றுக்கொண்ட வெற்றிகள்.

**(உச்சப் புள்ளிகள் - 25)**

IV. பழைய மாணவா் சங்க அங்கத்துவம், பாடசாலைக் காலத்தின் பின் பெற்றுக் கொண்டுள்ள கல்வி சார் வெற்றிகள், பாடசாலையின் வளர்ச்சிக்கு பாடசாலை அதிபரின் அனுமதியுடன் செயற்பாட்டிற்காகப் பெற்றுக் கொடுத்த பல்வேறு வழிகளிலான பல்வேறுபட்ட உதவிகள். (இங்கு பாடசாலையின் வளர்ச்சிக்கு வழங்கியுள்ள பல்வேறுபட்ட உதவிகளுக்கு உயர்ந்த பட்சம் 06 புள்ளிகளை மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.)

**(உச்சப் புள்ளிகள் - 24)**

குறிப்பு: (II), (III) மற்றும் (IV) இல் குறிப்பிடப்படும் உச்ச புள்ளிகளை நேர்முகப்பரீட்சைக் குழுவின் தற்றுணிவுக்கேற்ப வழங்கப்பட்டுள்ள சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு பாதகம் ஏற்படாதவாறு சிறு பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ள முடியும்.

**6.3 தற்போது குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் சகோதர, சகோதரிகள் - 15%**

(அ) இவ்வகையின் கீழ் பிள்ளையின் பெற்றோரின்/ சட்டரீதியான பாதுகாவலரின் மூத்த பிள்ளைகள் தற்போது அப்பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருப்பின் விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) இங்கு தெரிவானது கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப நடைபெறும்.

**புள்ளி வழங்கும் முறை**

I. **பாடசாலையில் உள்ள சகோதர சகோதரிகள்**

அ) பாடசாலையில் கல்வி கற்கும் சகோதர/ சகோதரிகள் பாடசாலையில் படித்த ஒரு தரத்திற்கு 02 புள்ளிகள் வீதம் 20 புள்ளிகள் (கல்வி கற்கும் சகோதர/ சகோதரிகளின் எண்ணிக்கை எவ்வளவாயினும் அதில் ஒருவருக்கு மாத்திரமே இப்புள்ளிகள் வழங்கப்படும்.)

ஆ) குறித்த பாடசாலையில் கல்விகற்கும் மேலே குறிப்பிடப்பட்ட சகோதரன்/ சகோதரி முதலாம் தரத்தில் அனுமதி பெற்று கல்வி கற்றுவருவாராயின். (05 புள்ளிகள் )

இ) குறித்த பாடசாலையில் சகோதரர்கள்/ சகோதரிகள் இருவர் அல்லது இருவரை விட அதிகமாக கல்விகற்போராயின். (05 புள்ளிகள் )

ஈ) பாடசாலையில் கல்வி கற்கும் சகோதர/ சகோதரிகள் பாடசாலைக்கு பெற்றுத் தந்துள்ள வெற்றிகளும் பாடசாலையின் வளர்ச்சிக்கு பெற்றோர் மூலம் பாடசாலைக்கு வழங்கியுள்ள பல்வேறுபட்ட உதவிகளும். (பாடசாலைக்கு வழங்கியுள்ள பல்வேறுபட்ட உதவிகளுக்கு உயர்ந்த பட்சம் 4 புள்ளிகள் மட்டுமே வழங்கப்படும்.) (10 புள்ளிகள் )

**(உச்சப் புள்ளிகள் - 40)**

## II. வதிவினை உறுதிப்படுத்துவதற்கான *அடிப்படை ஆவணங்கள்*

மேற்படி ஆவணங்கள் உரிய நபரின் பெயரில் சொந்தமாக்கப்பட்டு, விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து முந்திய 5 வருடங்கள் அல்லது அதைவிட அதிகமாகவோ பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளும், 5 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 4 வருடங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 80% மும், 4 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 3 வருடங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 60% மும், 3 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 2 வருடங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 40% மும், 2 ஆண்டுகளுக்குக் குறைவாகவோ அல்லது 1 வருடம் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 20% மும், 1 ஆண்டுக்குக் குறைவாகவோ அல்லது 6 மாதங்கள் வரை பெற்றிருந்தால் மொத்தப்புள்ளிகளில் 10% மும், 6 மாதங்களுக்குக் குறைவாகப் பெற்றிருந்தால் மொத்தப் புள்ளியில் 05% மும் என்றவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

- ✓ உரித்து உறுதி
- ✓ தலைப்புப்பதிவு சான்றிதழ் (விம்சவிய)
- ✓ அன்பளிப்பு உறுதி
- ✓ கொடுப்பனவுப் பத்திரம்
- ✓ அரசாங்க வழங்கல் பத்திரம் (**உரி**மையாளர் இறந்திருந்தால் விண்ணப்பதாரி / வாழ்க்கைத் துணை, **பின்**னுரித்தாளியாகியாக பெயரிடப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட உரித்துடையவர் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்)
- ✓ விகாரை, தேவாலயம் தொடர்பான சட்டமூலத்தின் கீழ் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகம் மூலம் வழங்கப் பட்டுள்ள குத்தகை உறுதிப் பத்திரம் அல்லது பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகம் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட உரிய விகாராதிபதி மூலம் பெற்ற சான்றுப்பத்திரம்.
- ✓ வரலாறு மூலம் உறுதிப்படுத்தப்பட்டு 10 வருடத்தை விட அதிக காலத்தைக் கொண்ட வெளியிடுகைப் பத்திரம்
- ✓ தவணைக் கொடுப்பனவு முறையின் கீழ் விலைக்கு எடுத்துள்ள வீட்டு ஆவணம் (உரிமையாளருடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தப் பத்திரமும் கொடுப்பனவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டுகளும்)

(உரித்துறுதி மற்றும் அன்பளிப்பு உறுதி தொடர்பாக வெளியிடுகைப் பத்திரம் எழுதப்பட்டிருந்தால் அவ் வெளியிடுகைப் பத்திரம் 10 வருடங்கள் அல்லது அதை விடக் கூடிய காலம் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)

- **விண்ணப்பதாரியின்/ துணையின் பெயருக்கு வதிவிடத்தின் உரிமை இருந்தால் - 10 புள்ளிகள்**
- **விண்ணப்பதாரியின்/ துணையின் தாய்/ தந்தைரின் பெயரில் வதிவிடத்தின் உரிமை இருந்தால் – 06 புள்ளிகள்**

உரிய 05 வருட காலப்பகுதியினுள் விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின் தாய்/ தந்தையின் பெயரிலுள்ள உறுதி விண்ணப்பதாரி அல்லது வாழ்க்கைத்துணைக்கு உரிமை மாற்றப்பட்டிருப்பின் உரிய இரு காலங்களும் பரிசீல்க்கப்பட்டே புள்ளிகள் வழங்கப்படும்.

(உரிமையானது வேறொருவரின் பெயரில் இருப்பின் இப்புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

அவசியமேற்படின் வரலாற்றுப் பதிவு அல்லது இரண்டாம் பிரதி பரீட்சிக்கப்பட்டு உரிமை உறுதிப்படுத்திக் கொள்ளப்படும்.

✓ விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின் பெயரில் மாத்திரம் தொடர்த்தேச்சியாக பதிவு செய்யப்பட்ட வாடகை உறுதிப்பத்திரம் (தேவையேற்படின் குத்தகை வழங்கியவரின் உரிமை தொடர்பாக வரலாறு ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.) குத்தகை உறுதி குறைந்தது விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து பின்வரும் 1 வருடத்திற்கு செல்லுபடியாகும்./ விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின் பெயரில் மாத்திரம் அரச உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிப்பதற்கான ஆவணம் (திணைக்கள தலைவர் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்) (பிரம்மச்சாரிகளுக்கான உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிப்போர் இப்புள்ளிகளுக்கான உரிமைக்காக சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்) வீட்டு வாடகை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வாடகை வீட்டாளர்கள் என உறுதிப்படுத்தப்படும் ஆவணங்கள் - 04 புள்ளிகள்

உரிய 05 வருட காலப்பகுதியினுள் விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின் பதிவு செய்யப்பட்ட வாடகை உறுதிப்பத்திரத்தின் உரித்தாளியாயிருந்து அதன் பின்னர் அவ் உரிமைத்துவம் நிரந்தர உறுதியொன்றாகத் தமக்கு மாற்றப்பட்டதாயின் உரிய இரு காலங்களும் பரிசீல்க்கப்பட்டே புள்ளிகள் வழங்கப்படும்.

(வாடகை உறுதிப் பத்திரத்திற்கு வெளியிடுகைப் பத்திரம் எழுதப்பட்டிருந்தால் அவ் வெளியிடுகைப் பத்திரம் 10 வருடங்கள் அல்லது அதை விடக் கூடிய காலம் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)

✓ விண்ணப்பதாரி/ வாழ்க்கைத்துணை குறித்த 10 வருடங்களைவிட அதிககாலம் அரச காணியொன்றில் (உரிய முகவரியில்) வசிப்பவராயின் உரிய பிரதேசத்தின் மாநகர ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மூலம் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ் (உரிமையானது வேறொருவரின் பெயரில் இருப்பின் இப்புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.) – 04 புள்ளிகள்

✓ **ஏனைய ஏற்றுக் கொள்ளப்படும் ஆவணங்கள் - 02 புள்ளிகள்**

வசிப்பிடம் தொடர்பான மேலே கூறப்பட்டிருக்கும் ஆவணங்கள் அல்லாத ஆனால், விண்ணப்பதாரி/ வாழ்க்கைத் துணைக்குரிய முகவரியில் நிரந்தர வதிவைக் கொண்டிருப்பாரானால், விண்ணப்ப இறுதித்திகதியன்று முந்திய 06 வருடங்கள் அல்லது அதைவிட அதிக காலம், வதிவை உறுதிப்படுத்தும் ஆவணம் தொடர்பாக, 04 ஆவணகளிற்க்கு விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின பெயரில் இருப்பின் 0.5 புள்ளிகள் வீதமும் விண்ணப்பதாரியின் அல்லது வாழ்க்கைத் துணையின் தாய் அல்லது தந்தையின் பெயரிலிருப்பின் 0.25 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

மின் கட்டணப் பட்டியல்/ நீர் கட்டணப் பட்டியல்/ வரிச் சான்றிதழ்/ ஏக்கர் வரிப்பத்திரம்/ விண்ணப்பதாரியின்/ வாழ்க்கைத் துணையின் பிறப்புச் காண்றிதழ்.

மேற்படி ஆவணங்கள் கட்டாயமாக முந்திய 6 வருடங்களுக்கு அல்லது அதைவிட அதிக காலத்துக்குரியதாக இருப்பதோடு அந்த ஆவணங்களில் குறைந்தது 03 ஆவணமாவது இருந்தால் மட்டுமே இப்புள்ளிகள் வழங்கப்படும் .

குறித்த 6 வருட காலத்தினுள் விண்ணப்பதாரியின்/ வழ்க்கைத் துணையின் தாய்/ தந்தையின் பெயரில் செலுத்தப்பட் கட்டணப் பட்டியல்கள் பின்னர் விண்ணப்பதாரியின்/ வழ்க்கைத் துணையின் பெயருக்கு மாற்றப்பட்டிருப்பின் உரிய காலங்கள் பரிசீல்க்கப்பட்டே புள்ளிகள் வழங்கப்படும்.

✓ வதிவிடம் உறுதிப்படுத்தப்படுவதற்கு மேலே குறிப்பிடப்பட்ட யாதேனும் ஆவணங்களை முன்வைக்க முடியாமற் போன என்றாலும் யாதேனும் அண்மித்த பாடசாலைக்காக புள்ளி வெட்டப்படாத, விண்ணப்பதாரர்/வாழ்க்கைத்துணைக்கு உரிய முகவரியில் 5 வருடத்துக்கு முன்னிருந்து வாக்காளர் பதிவுள்ள, விண்ணப்பதாரர்/ வாழ்க்கைத்துணை பிறந்தது தொடக்கம் உரிய இடத்தில் வதிவிலிருப்பதை உறுதி செய்து கொள்ளக்கூடிய (பிறப்புச் சான்றிதழ், விடுகை சான்றிதழ் …. முதலியன மூலம்) திருமணத்தின் பின்னர் இதுநாள் வரை விண்ணப்பிக்கும் முகவரியில் வதிவிலிருப்பது உறுதிசெய்து கொள்ளப்படும் விண்ணப்பதாரருக்கு – புள்ளி 06

(ஆகக்கூடியது 10 புள்ளிகள்)

**“இந்த வகையின் கீழ் மேலுள்ள விடயங்களுக்குரிய வதிவை உறுதி செய்து கொள்வதற்காக உரித்தான புள்ளியை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரருக்கு மட்டுமே இதற்கு பின்னர் வரும் பாகங்களுக்காக புள்ளிகள் பெற்றுக்கொள்ள முடியும் ”**

## III. வதிவினை உறுதிப்படுத்துவதற்காக வாக்காளர் இடாப்பில் பதிவு

வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை குறிப்பதற்கு விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள பகுதி (இல - 06) பூரணப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

அ) வாக்காளர் இடாப்பில் பதிவிற்காக புள்ளிகள் வழங்கும் போது விண்ணப்பிக்கும் வருடத்திற்கு முந்தய வருடம் தொடக்கம் அண்மித்த 05 வருடங்கள் (2020 – 2016) கவனத்திற் கொள்ளப்படும்.

அட்டவணை இல:- (II) வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளமைக்கு புள்ளிகள் வழங்கல்

| | **விபரம்** | **புள்ளிகள்** |
|---|---|---|
| i. | தாய், தந்தை இருவரினதும் பெயர்கள்/ சட்டரீதியான பாதுகாவலரின் பெயர் 05 வருடங்களும் பதிவாகியிருப்பின் | 20 |
| ii. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 04 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 18 |
| iii. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 03 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 16 |
| iv. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 02 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 14 |
| v. | தாய்/ தந்தையின் பெயர் 05 வருடங்களும் துணையின் பெயர் ஏதாவது 01 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 12 |
| vi. | தாய்/ தந்தையின் பெயர் மாத்திரம் 05 வருடங்கள் பதிவாகியிருப்பின் | 10 |

**(உச்சப் புள்ளிகள் - 20)**

குறிப்பு:- ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டு மேற்காட்டப்பட்ட புள்ளி வழங்கும் முறை தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி புள்ளி வழங்கும் அட்டவணையினுள் அடங்காத சந்தர்ப்பத்தில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள காலத்திற்கு ஒருவருக்கு 02 புள்ளிகள் வீதம் புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

சட்டரீதியான பாதுகாவலர் தாய், தந்தை இருவருமெனக் கருதப்படுவதனால் தாய், தந்தை ஆகிய இருவரினதும் பதிவு வருடங்களின் எண்ணிக்கைக்கேற்ப கிடைக்கும் புள்ளிகள் (அதாவது வருடம் ஒன்றிற்கு 04 புள்ளிகள்) சட்ட ரீதியான பாதுகாவலருக்கு வழங்குதல் வேண்டும்.

ஆ) இதே போன்று முன் வருடங்களில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த விண்ணப்பதாரரின் துணை வெளிநாடு சென்றிருப்பின் அல்லது இறந்து இருப்பின் அல்லது சட்டரீதியாக விவாகரத்து பெற்றிருப்பின் உரிய ஆவணங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு இருவரும் இருப்பதாக கருதி புள்ளிகள் வழங்கப்படும்.

இ) தற்போது வசிக்கும் இடத்தின் ஆவணங்களுக்கு ஏற்பவே வதிவிற்கான புள்ளிகள் வழங்கப்படும். எனினும் தற்போது வசிக்கும் இடத்தில் வதிவதற்கு முன்பு ஊட்ட பிரதேசத்தினுள் வேறோர் இடத்தில் வசித்த விண்ணப்பதாரி ஒருவர் தமது குறைந்தபட்ச ஐந்து வருட வதிவுக்காலத்தினை உறுதிப்படுத்துவதற்காக வாக்காளர் பதிவு அட்டவணைகள் இரண்டு இடத்திற்குமாகச் சமர்ப்பிக்கும் போது, அந்த இரு இடத்திலும் விண்ணப்பிக்கும் பாடசாலைக்கு மிக அண்மையிலுள்ள உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய பாடசாலைகள், ஒரே பாடசாலைகளாக இருந்தால் மாத்திரம் இரு இடங்களிலிருந்தும் சமர்ப்பிக்கப்பட்ட வாக்காளர் அட்டவணைகள் தற்போதய வசிப்பிடத்தின் வாக்காளர் அட்டவணைகளாகக் கருத்திற்கொள்ளப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்.

ஈ) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்திகதியன்றிலிருந்து முந்திய 5 வருடங்களுக்குள் செய்யப்பட்ட அரசாங்க அபிவிருத்தித் திட்டங்கள் அல்லது அபிவிருத்திப் பிரேரணைகளுக்காக, சில பிரதேசங்களின் குடியிருப்பாளர்கள் அப் பிரதேசங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வேறு பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது மேற்படி அரசாங்க அபிவிருத்தி வேலைகள் காரணமாக அப்புறப்படுத்தப்பட்ட குடியிருப்பாளர்கள் அரசாங்கத்தின் நட்டஈட்டினை பெற்று வேறு பகுதிகளுக்கு நிரந்தரமாக குடியேறியுள்ள வேளையில், அவர்களின் பிள்ளைகளை பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கு முந்திய மற்றும் தற்போதைய வதிவிடங்கள் இரண்டுக்குமுரிய முன்வைக்கப்பட்ட ஆவணங்கள், ஒரே இடத்துக்குரிய ஆவணமாக கவணிக்கப்பட்டு உரிய நியதிகளின் படி புள்ளிகள் வழங்கப்படவேண்டும்.

**IV. வசிப்பிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள அண்மைத்தூரம்**

விண்ணப்பதாரியின் வதிவு உறுதிப்படுத்தப்படின் மாத்திரம் அவரால் தனது தற்போதைய வசிப்பிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலையை விட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இல்லாவிடின் வழங்கப்படும் உச்ச புள்ளிகள் பெற்றுத் தரப்படும். விண்ணப்பிக்கும் பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மையில் பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இருப்பின் உச்சப் புள்ளிகளிலிருந்து அண்மித்த ஒரு பாடசாலைக்கு 04 புள்ளிகள் வீதம் குறைக்கப்படும்.

(உரிய பிள்ளைக்கு ஆரம்பப் பிரிவுடன் கூடிய அனுமதி பெறக்கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் என்று கருதப்படுவது அப்பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய தேவையான போதனா மொழியைக் கொண்டதும், தமக்கு உரிய பெண்கள்/ ஆண்கள் பாடசாலை அல்லது கலவன் பாடசாலை என்பதும் உரிய பிள்ளையின் சமயத்துக்காக 10% அல்லது அதற்கு மேலதிகமான விகிதாசாரத்தை அனுமதிக்கும் அரச பாடசாலைகளாகும்.)

**(உச்சப் புள்ளிகள் - 30)**

**6.4 கல்வியமைச்சின் கீழ் அரச பாடசாலைக்கல்வியில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனமொன்றில் பணியாற்றுவோரின் பிள்ளைகள் - 05%**

(அ) கல்வி அமைச்சின் கீழ் அரச பாடசாலைக் கல்வியில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனமொன்றில் பணியாற்றும் நிரந்தரப் பணியாளர்களாக தாய்/ தந்தை/ சட்ட ரீதியான பாதுகாவலர் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்

தினத்திற்கு சேவையில் இருப்பின் மாத்திரமே இவ்வகைக்கு விண்ணப்பிக்க முடியும்

(ஆ) இங்கு தெரிவானது கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப நடைபெறும்.

**புள்ளிகள் வழங்கும் முறை**

**I.** கல்வி அமைச்சின் கீழ் அரச பாடசாலைக் கல்வியில் நேரடித்தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனங்களில் நிரந்தரப் பணியாளராக சேவையாற்றிய காலம் - முழு வருடமொன்றுக்கு 01 புள்ளிகள் வீதம்

**(உச்சப் புள்ளிகள் - 20)**

**II.** கஷ்டப் பாடசாலை சேவைக் காலம் (கஷ்டப் பாடசாலை சேவைக்காலம் உரிய வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாத்திரம் உறுதிப்படுத்த வேண்டும். கல்வி அமைச்சின் மூலம் அதிகஷ்ட மற்றும் கஷ்டப் பாடசாலை என பெயரிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்திற்கிணங்க)

(அ) தற்போது கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றின் கஷ்டப் பாடசாலைக் காலம் (இக்காலம் தொடர்ச்சியாய் இருத்தல் வேண்டும்) - பூரண 01 வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் 25 புள்ளிகள்

(ஆ) தற்போது கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றாதிருப்பினும் இதற்கு முன் கஷ்டப் பாடசாலையொன்றில் சேவையாற்றியிருப்பின் சேவைக் காலம் (கஷ்டப்பிரதேச கொடுப்பனவு பெற்றமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.) - பூரண 01 வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம் 15 புள்ளிகள்

**(உச்சப் புள்ளிகள் - 25)**

குறிப்பு:- குறைந்த பட்சம் ஒரு வருடத்திற்கு அதிகமான சேவைக்காலம் கஷ்ட்டப் பாடசாலையொன்றில் உள்ளவர்களுக்கு மாத்திரம் பூரண வருடத்திற்குய புள்ளியும் 06 மாதங்கள் அல்லது அதைவிடக் கூடுதலாகம் இருப்பின் உரிய புள்ளியில் அரைப்பங்கு வழங்கப்படும்.

**III.** பெற்றுக்கொள்ளாத விடுமுறைகள்:

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் வருடத்திற்கு முந்திய 05 வருடங்களுக்காக கலண்டர் வருடமொன்றில் பெற்றுக்கொள்ளாத 20 விடுமுறை நாட்களுக்கு 02 புள்ளிகள் வீதம்
(வருடத்தில் பெற்றுக்கொள்ளாத விடுமுறை நாட்கள் 20 ஐ விடக்குறைவாயின் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது).

**(உச்சப் புள்ளிகள் - 10)**

**IV.** பிள்ளையை அனுமதிக்க விரும்பும் பாடசாலையிலேயே சேவையாற்றின்,

- ❖ சேவைக்காலம் 03 வருடங்கள் அல்லது அதைவிடக் கூடுதலாயின் 10 புள்ளிகள்.
- ❖ சேவைக் காலம் 03 வருடங்களை விடக் குறைவாயின் 05 புள்ளிகள்

**(உச்சப் புள்ளிகள் - 10)**

**V.** தற்போதைய நிரந்தர வதிவிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலைக்குள்ள தூரம் (அண்மித்த, பொதுப் போக்குவரத்துப் பாதையை உபயோகித்தல் வேண்டும்)

| | |
|---|---|
| 01 கி.மீ உட்பட்டதென்றால் | - 10 புள்ளிகள் |
| 01 கி.மீ விட அதிகம் 03 கி.மீ வரை | - 08 புள்ளிகள் |
| 03 கி.மீ விட அதிகம் 05 கி.மீ வரை | - 06 புள்ளிகள் |
| 05 கி.மீ. ஐ விட அதிகமாயின் | - 04 புள்ளிகள் |

நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கு 6.3 II இலுள்ளவாறு ஆவணத்துக்குரிய அது தொடர்பான காலத்துக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

**(உச்சப் புள்ளிகள் - 10)**

VI. தற்போதைய சேவை நிலையத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலைக்குள்ள தூரம்

| | |
|---|---|
| 100 கி.மீ. ஐ விட அதிகமெனின் | - 25 புள்ளிகள் |
| 100 கி.மீ. விட குறைவு 70 கி.மீ. வரை | - 20 புள்ளிகள் |

70 கி.மீ. விட குறைவு 40 கி.மீ. வரை - 15 புள்ளிகள்
40 கி.மீ. விட குறைவு 20 கி.மீ. வரை - 10 புள்ளிகள்
20 கி.மி. ஐ விட குறைவாயின் - 05 புள்ளிகள் **(உச்சப் புள்ளிகள் - 25)**

**6.5 அரச சேவைத் தேவையின் பொருட்டு / அரச வருடாந்த இடமாற்றம் பெற்ற அரச/ கூட்டுத்தாபன/ நியதிச்சட்டசபை/ அரச வங்கி அலுவலர்களின் பிள்ளைகள் - 04%**

(அ) இவ் வகைகளின் கீழ் அரச சேவைத் தேவையின் பொருட்டு/ அரச வருடாந்த இடமாற்றம் பெற்ற அரச/ கூட்டுத்தாபன/ நியதிச்சட்டசபை/ அரச வங்கி அலுவலர்களின் அரச/ கூட்டுத்தாபன/ நியதிச்சட்ட சபை/ அரசாங்க வங்கி அலுவலரட்களுக்கு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முந்திய 05 வருடங்களினுள் பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தினுள், அமைந்த நிறுவனமொன்றுக்கு இடமாற்றம் பெற்று கடமையை பாரமேற்றதன் பின் பாடசாலையின் ஊட்டற் பிரதேசத்தினுள் பிள்ளையுடன் விண்ணப்பதாரி வசித்தால் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

இங்கு பாடசாலை அமைந்துள்ள பிரதேசம் என்பதால் குறிப்பிடப்படுவது உரிய பாடசாலையை மையமாக வைத்து கிலோமீட்டர் 10 ஐ ஆரையாகக் கொண்டு வரையும் வட்டத்தின் எல்லையினுள் உரிய நிறுவனம் அமைந்திருத்தலாகும். (தேவையேற்படின் நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு இவ்வெல்லையினை பெரிதாக்கிக் கொள்ள முடியும்). அத்தோடு முந்தைய சேவை நிலையம் அமைந்திருந்த பிரதேசத்தில் பிள்ளையுடன் வசித்து புதிய சேவை நிலயத்திற்குரிய வசிப்பிடத்திற்கு பிள்ளையுடன் வருதல் வேண்டும். இன்னும் கடைசியாகப் பெற்ற இடமாற்றம் மட்டுமே கருத்திற் கொள்ளப்படும். மேலும் இணைப்புச் செய்தல் பயிற்சிப் பாடநெறிகள், கல்விச் செயற்பாடுகளுக்காக வசிப்பிடத்தை மாற்றுதல் போன்றன இதன் கீழ் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ஆ) இங்கு தெரிவானது கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப நடைபெறும்.

**புள்ளி வழங்கும் முறை**

I. முன்னைய சேவை நிலையத்திற்கும் இடமாற்றம் பெற்று வந்த சேவை நிலையத்துக்கும் இடையிலான தூரம் (அண்மித்த, பொதுப் போக்குவரத்துப் பாதையை உபபயோகித்தல் வேண்டும்)

150 கி.மீ. ஐ விட அதிகமெனின் - 35 புள்ளிகள்
150 கி.மீ. ஐ விட குறைவு 100 கி.மீ. வரை - 28 புள்ளிகள்
100 கி.மீ. ஐ விட குறைவு 50 கி.மீ. வரை - 21 புள்ளிகள்
50 கி.மீ. ஐ விட குறைவு 25 கி.மீ. வரை - 14 புள்ளிகள்

**(உச்சப் புள்ளிகள் - 35)**

**II. வதிவிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள கிட்டிய தூரம் (6.3 II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் ஊடாக வதிவினை உறுதிப்படுத்த வேண்டும்)**

இடமாற்றம் பெற்று வந்து வசிக்கும் வசிப்பிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள அண்மைத் தூரம் வசிப்பிடத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடசாலையை விட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இல்லாவிடின் வழங்கப்படும் உச்ச புள்ளிகள் பெற்றுத் தரப்படும். விண்ணப்பிக்கும் பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மையில் பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இருப்பின் உச்ச புள்ளிகளிலிருந்து அண்மித்த ஒரு பாடசாலைக்கு 03 புள்ளிகள் வீதம் குறைக்கப்படும்.

(உரிய பிள்ளைக்கு ஆரம்பப் பிரிவுடன் கூடிய அனுமதி பெறக்கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் எனக் கருதப்படுவது அப்பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய தேவையான போதனா மொழியைக் கொண்டதும் தமக்கு உரிய பெண்கள்/ ஆண்கள் பாடசாலை அல்லது கலவன் பாடசாலை என்பதும் உரிய

பிள்ளையின் சமயத்துக்காக 10% அல்லது அதற்கு மேலதிகமான விகிதாசாரத்தை அனுமதிக்கும் அரச பாடசாலைகளாகும்)

**(உச்சப் புள்ளிகள் - 30)**

III. அரச/ கூட்டுத்தாபன/ நியதிச்சட்டசபை/ அரச வங்கி அலுவலரின் சேவைக்காலத்திற்கு வருடத்துக்கு 01 புள்ளி வீதம்

**(உச்சப் புள்ளிகள் - 10)**

IV. முந்திய சேவை நிலையத்தில் பணியாற்றிய காலம் (இறுதியாக இடமாற்றம் பெறுவதற்கு முன் சேவையாற்றிய சேவை நிலையம்)

| | |
|---|---|
| 03 வருடங்கள் அல்லது அதைவிட அதிகம் | - 10 புள்ளிகள் |
| 02 வருடத்திலிருந்து 03 வருடங்களாயின் | - 08 புள்ளிகள் |
| 01 வருடத்திலிருந்து 02 வருடங்களாயின் | - 05 புள்ளிகள் |
| 06 மாதத்திலிருந்து 01 வருடங்களாயின் | - 03 புள்ளிகள் |
| 03 மாதத்திலிருந்து 06 மாதங்களாயின் | - 01 புள்ளிகள் |

**(உச்சப் புள்ளிகள் - 10)**

V. இடமாற்றம் பெற்று முடிவடைந்த காலம் (விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு)

| | |
|---|---|
| வருடமொன்றிக்குள் | - 05 புள்ளிகள் |
| 01 வருடம் - 02 வருடத்தினுள் | - 04 புள்ளிகள் |
| 02 வருடம் - 03 வருடத்தினுள் | - 03 புள்ளிகள் |
| 03 வருடம் - 04 வருடத்தினுள் | - 02 புள்ளிகள் |
| 04 வருடம் - 05 வருடத்தினுள் | - 01 புள்ளி |

**(உச்சப் புள்ளிகள் - 05)**

VI. பெற்றுக் கொள்ளாத விடுமுறைகள்.

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் வருடத்திற்கு முந்திய 05 வருடங்களுக்காக கலண்டர் வருடமொன்றில் பெற்றுக்கொள்ளாத 20 விடுமுறை நாட்களுக்கு 02 புள்ளிகள் வீதம்

(வருடத்தில் பெற்றுக்கொள்ளாத விடுமுறை நாட்கள் 20 ஐ விடக் குறைவாயின் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது).

**(உச்சப் புள்ளிகள் - 10)**

**குறிப்பு**: முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பாக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தின் பின் அல்லது முதலாம் தரம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அரசின் சேவைத் தேவையின் பொருட்டு இடமாற்றம் பெற்று/ உரிய பிள்ளையுடன் வெளிநாட்டிலிருந்து விட்டு வரும் அலுவலர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக உரிய பாடசாலை அடங்கும் மாகாணக் கல்வி திணைக்களத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பபடிவங்களை அவர்கள் அனுப்புதல் வேண்டும். இப் பெற்றோரின் பிள்ளைகளுக்காக உரிய கல்வி அதிகாரிகள் மூலம் தீர்மானிக்கப்பட்ட பாடசாலையொன்று பெற்றுத் தரப்படும்.

## 6.6 பிள்ளையுடன் வெளிநாட்டில் வசித்துவிட்டு வந்தவர்களின் பிள்ளைகள் - 01%

(அ) இவ் வகையின் கீழ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் வருடத்திற்கு முந்திய வருடத்தின் ஜுலை 01 ஆம் திகதி தொடக்கம் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் வரையான காலத்தினுள் பிள்ளையுடன் வெளிநாட்டில் வசித்து விட்டு வந்துள்ள தாய்/ தந்தை/ சட்டரீதியான பாதுகாவலருக்கு விண்ணப்பிக்க முடியும். அதேபோல் அவர்கள் குறைந்தது தொடர்ச்சியான வருடமொன்றுக்கு குறையாத காலம் வெளிநாட்டில் பணிபுரிந்திருக்க வேண்டும்.

(ஆ) இங்கு தெரிவானது கீழ்க் காட்டப்படும் புள்ளி வழங்கும் முறைக்கேற்ப நடைபெறும்.

**புள்ளி வழங்கும் முறை**

I. நாடு திரும்பிய தினம் வரை பிள்ளையுடன் வெளிநாட்டிலிருந்த காலம்

தொடர்ந்து 03 வருடங்கள் அல்லது அதைவிடக் கூடிய காலம் - 25 புள்ளிகள்
தொடர்ந்து 02 தொடக்கம் 03 வருடங்கள் வரையான காலம் - 15 புள்ளிகள்
தொடர்ந்து 01 தொடக்கம் 02 வருடங்கள் வரையான காலம் - 10 புள்ளிகள்

**(உச்சப் புள்ளிகள் - 25)**

(இக்காலத்தினுள் மாதமொன்றிற்கு குறைந்த காலம் விடுமுறையில் இலங்கைக்கு வந்து மீண்டும் உரிய இடத்திற்குச் சென்றிருப்பின் தொடர்காலம் முறிவடையாது)

II. வெளிநாடு சென்றமைக்கான காரணம்:

இலங்கை அரசின் தூதரக அலுவல் காரணமாக - 40 புள்ளிகள்

சொந்த தொழில் தேவையொன்றுக்காக - 30 புள்ளிகள்

(குறைந்தது 2 ஆண்டுகள் வெளிநாட்டில் தொழில் புரிந்திருக்க வேண்டும்)

இலங்கை அரசின் தேவையொன்றுக்காக - 25 புள்ளிகள்

(அரசின் மூலம் அரசிற்காக வெளிநாடொன்றில் கடமையொன்றினை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட ஒருவருக்காக)

புலமைப் பரிசிலொன்றைப் பெற்று - 20 புள்ளிகள்

(புரியும் கடமைக்கான தொழில் வாண்மை விருத்திக்கு அவசியமானது)

**(உச்சப் புள்ளிகள் - 40)**

III. வசிப்பிடத்திலிருந்து பாடசாலைக்குள்ள அண்மைத் தூரம்

(வசிப்பிடத்திலிருந்து 6.3 II ல் உள்ளவாறு ஆவணத்தின் படி வதிவினை உறுதிப்படுத்தல் வேண்டும்)

விண்ணப்பிக்கும் பாடசாலையை விட அண்மையில் உரிய பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இல்லாவிடின் வழங்கப்படும் உச்சப் புள்ளிகள் பெற்றுத் தரப்படும். விண்ணப்பிக்கும் பாடசாலையை விட வசிப்பிடத்துக்கு அண்மையில் பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய ஆரம்பப் பிரிவுடன் கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் இருப்பின் உச்ச புள்ளிகளிலிருந்து அண்மித்த ஒரு பாடசாலைக்கு 3.5 புள்ளிகள் வீதம் குறைக்கப்படும்.

(உரிய பிள்ளைக்கு ஆரம்பப் பிரிவுடன் கூடிய அனுமதி பெறக்கூடிய வேறு அரசாங்கப் பாடசாலைகள் என்று கருதப்படுவது அப்பிள்ளைக்கு அனுமதி பெறக்கூடிய தேவையான போதனா மொழியைக் கொண்டதுமான தமக்கு உரிய பெண்கள்/ ஆண்கள் பாடசாலை அல்லது கலவன் பாடசாலை என்பதும் உரிய பிள்ளையின் சமயத்துக்காக 10% அல்லது அதற்கு மேலதிகமான விகிதாசாரத்தை அனுமதிக்கும் அரச பாடசாலைகளாகும்.)

**(உச்சப் புள்ளிகள் - 35)**

## 7.0 யுத்த நடவடிக்கை கடமைகளில் ஈடுபட்ட முப்படைகளினதும் பொலிஸ் உறுப்பினர்களினதும் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட சலுகை

7.1 யுத்த நடவடிக்கைக் கடமைகளில் ஈடுபட்ட முப்படைகள், பொலிஸ் உறுப்பினர்கள் மூலம் தமது பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு/ சட்டமும் ஒழுங்குக்குமான அமைச்சின் செயலாளருக்கு அல்லது உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களிடையே தகைமையான பிள்ளைகளை தெரிவு செய்வதற்காக புள்ளி வழங்கும் முறையொன்று உரிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் உரிய அதிகாரிகள் மூலம் தயார் செய்யப்பட்டு அதன்படி பிள்ளைகள் தெரிவு செய்யப்படுவர். இங்கு யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு அங்கவீனமான உறுப்பினர்களுக்கு முன்னுரிமை பெற்றுத் தரப்படல் வேண்டும்.

7.2 பாதுகாப்பு அமைச்சினதும் சட்டமும் ஒழுங்குக்குமான அமைச்சினதும் செயலாளர்கள் மூலம் பாடசாலையொன்றின் சமாந்தர வகுப்பொன்றுக்கு 05 பிள்ளைகள் வீதம் தெரிவுசெய்யப்பட்டு கல்வி அமைச்சுக்கு பெற்றுத் தரப்பட்டதன் பின்னர் அப்பிள்ளைகள் பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவர்.

7.3 பாதுகாப்பமைச்சினதும் சட்டமும் ஒழுங்குக்குமான அமைச்சினதும் அதிகாரிகள் மூலம் புள்ளிவழங்கும் முறை ஒன்றுக்கு ஏற்ப பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்டு பாடசாலை பெற்றுக்கொடுக்கும் செயற்பாடு நடைபெறுவதால் இது தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டியதும் அவ்அமைச்சுகளின் உரிய அதிகாரிகள் மூலமேயாகும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

## 8.0 ஆரம்ப நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

8.1 பிள்ளைகளைத் தெரிவு செய்வதற்காக பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் மூலம் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியையும் விண்ணப்பத்துடன் இணைத்த ஆவணங்களின் மூலப் பிரதிகளையும் பெற்றுத்தரப்பட்டுள்ள புள்ளி வழங்கும் முறைக்கேற்ப புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களினதும் மூலப் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக இவ் ஆவணங்களின் நிழற் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.2 தம்மால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் உண்மைத் தன்மையை சத்தியக் கடதாசி ஒன்றின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8.3 கிராம அலுவலர் அலுவலகத்தில் சான்றுப்படுத்தப்பட்ட வாக்காளர் இடாப்புக்களின் பதிவு விபரங்கள். தேர்தல் திணைக்களத்தின் மூலம் பெற்றுத் தரப்பட்டிருக்கும் வாக்காளர் இடாப்புக்கள் மூலம் நேர்முகப் பரீட்சைக்குழு உறுதிப்படுத்திக் கொள்ளப்படும். வாக்காளர் இடாப்பில் பதிவு தொடர்பில் ஏதாவது முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் தேர்தல் திணைக்களத்தின் மூலம் அவை பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளப்படும்.

8.4 சமர்ப்பிக்கப்பட்ட ஏதும் ஆவணம் பிழையானதென நேர்முகப் பரீட்சைக்குழு கருதினால் அதை வழங்கிய நிறுவனத்திடம் அல்லது அதிகாரம் பெற்றவரிடம் விசாரித்து அது பற்றிய உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நேர்முகப் பரீட்சைக்குழுவின் தலைவருக்கு முழு அதிகாரம் உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அது பற்றிய உரிய அதிகாரம் பெற்றவருக்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி அறிவிக்க முடியும். அதன் பிரகாரம் சமர்ப்பித்துள்ள ஆவணம்/ ஆவணங்கள் பிழையானவை என உறுதிப்படுத்தப்படுமாயின் அவ்வாறான ஆவணம்/ ஆவணங்கள் சமர்ப்பித்தமைக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

8.5 நேர்முகப் பரீட்சையின் போது உங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள், ஏனைய விபரங்களுக்கு ஏற்ப உங்கள் முன்னிலையிலேயே புள்ளியிடும் தாளில் புள்ளிகள் இடப்படும். எனினும் பிழையான தகவல்கள்/ போலியான ஆவணங்கள் சமா்ப்பிக்கப்பட்டுள்ளமை நிரூபிக்கப்பட்டால் விண்ணப்பத்தினை நிராகரிப்பதற்கு/ புள்ளிகளை திருத்துவதற்கு நேர்முகப் பரீட்சைக் குழுவுக்கு முழு அதிகாரம் உண்டு.

## 9.0 தற்காலிக அட்டவணை

9.1 புள்ளி முன்னுரிமைக்கேற்ப ஒவ்வொரு வகைகளுக்கும் வெவ்வேறாக தெரிவுகள் நடைபெறுவதோடு தற்காலிக அட்டவணை ஒன்றும் காத்திருக்கும் அட்டவணை ஒன்றும் தயார் செய்யப்படும்.

9.2 தற்காலிக அட்டவணையையும் காத்திருக்கும் அட்டவணையையும் காட்சிக்கு விடப்பட முன்பு பாடசாலைக்கு அண்மித்து வசிப்போரின் வகையின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பிள்ளைகளின் வதிவிடத்தினை உறுதிப்படுத்த வதிவிடத்துக்குச் சென்று பரிசீலனை செய்யப்பட்டு உறுதிசெய்து கொள்ளப்படும். வதிவிடத்துக்குச் சென்று பரீட்சிக்கையில் வதிவு உறுதி செய்யப்படாவிடில் அட்டவணையிலிருந்து பெயர் நீக்கப்படும். அவசியமேற்படின் வேறு வகைகளுக்காகவும் வசிப்பிடம் சென்று பரீட்சிக்கப்படலாம்.

9.3 ஒன்றுக்கதிகமான வகைகளுக்கு விண்ணப்பித்த பிள்ளையொன்று ஒன்றுக்குமதிகமான வகைகளுக்கு தெரிவுசெய்யப்படும் சந்தர்ப்பத்தில் அந்த ஒருவகையில் அல்லது தெரிவு செய்யப்பட வேண்டிய சந்தர்ப்பம் இருக்குமாயின் அச்சந்தர்ப்பம் இல்லாது போகுமாறு அந்தப்பிள்ளையின் பெயர் அவற்றில் அதிக வீதத்தைக் கொண்டுள்ள வகைகள் மட்டும் மீதப்படுத்தப்பட்டு ஏனைய வகைகளிலுள்ள அட்டவணைகளில் இருந்து அகற்றப்படல் வேண்டும்.

9.4 நேர்முகப் பரீட்சைக்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளின் தற்காலிக அட்டவணையும் காத்திருக்கும் அட்டவணையும் நேர்முகப் பரீட்சைக்குழு உறுப்பினர்களின்

ஒப்பத்துடன் பாடசாலை அறிவித்தல் பலகையிலும் பாடசாலை இணையத்தளத்திலும் அதிபரினால் காட்சிக்கு விடப்படுவதோடு ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் இது தனிப்பட்ட முறையில் அறியத்தரப்படமாட்டாது. எனவே இது பற்றி பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர்கள் விழிப்புடன் இருத்தல் அவசியமானதாகும்.

## 10.0 மேன்முறையீடு, எதிர்ப்பைத் தெரிவித்தல்

**10.1** காட்சிக்கு விடப்பட்ட தற்காலிக அட்டவணையும், காத்திருக்கும் அட்டவணையும் பாடசாலை அறிவித்தல் பலகையிலும் இணையத்தளத்திலும் காட்சிக்கு விடப்பட்டு இரண்டு வாரங்களுக்குள், அட்டவணைகளில் ஏதாவது ஓரிடத்தில் தகைமையற்ற பிள்ளையொன்றின் பெயர் அடங்கியிருப்பின் அது பற்றிய எதிர்ப்பையும் தகைமையிருந்தும் தமது பிள்ளையின் பெயர் பொருத்தமற்ற ஓரிடத்தில் இருப்பின் அது பற்றிய மேன்முறையீட்டினையும் அல்லது இதில் ஏதாவது ஒன்றினை அறிவித்தல் பலகையிலும் இணையத்தளத்திலும் காட்சிக்கு விடப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப தயார் செய்து அதிபருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும். இத்தோடு முகவரியுடன் கூடிய பதிவுத் தபாலுக்கான முத்திரைகள் ஒட்டிய கடிதஉறை ஒன்றையும் அனுப்புதல் வேண்டும். இவ் இரு வாரகால எல்லையின் பின் சமர்ப்பிக்கப்படும் எவ்வித எதிர்ப்புகளும் மேன்முறையீடுகளும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**10.2** எதிர்ப்புகள் சமர்ப்பிக்கப்படுகையில் முழு அட்டவணைக்கும் எதிர்ப்பைத் தெரிவிக்காது பெயர் குறிப்பிட்டு தெளிவாக எதிர்ப்புகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இங்கு எதிர்ப்புக்குள்ளாகும் பிள்ளையின்/ பிள்ளைகளின் பெயர்கள், அழைப்பிலக்கங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பவரின் பெயர், முகவரி, பிள்ளையின் அழைப்பிலக்கம் போன்றவற்றினையும் தமது எதிர்ப்பைச் சுருக்கமாகவும் எழுதி அனுப்புதல் வேண்டும்.

**10.3** மேன்முறையீடுகள், எதிர்ப்புக்கள் பரீட்சிக்கப்படுவதற்காக மேன்முறையீடு, எதிர்ப்பினை பரீட்சிக்கும் குழு ஒன்று நிறுவப்படும். இக்குழு மூலம் எதிர்ப்பினை தெரிவித்தோர் எதிர்ப்புக்குள்ளானோர் மேன்முறையீடு செய்தோர் அனைவரும் வெவ்வேறாக ஆரம்ப நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பித்த ஆவணங்கள் ஊடாக மீண்டும் பரீட்சிக்கப்படுவர். அதேபோல் எதிர்ப்புக்களை பரீட்சிக்கையில் எதிர்ப்புக்குள்ளான பிள்ளையின் பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர் விசாரணைக்கு அழைக்கப்படுமுன் அவர்களுக்கு அதுபற்றிய விளக்கங்கள் பெற்றுக்கொள்ள வாய்ப்பு வழங்கப்படும்.

**10.4** மேன்முறையீடு, எதிர்ப்பினைப் பரீட்சிக்கும் குழு மூலம் மேன்முறையீடு எதிர்ப்புகள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின் தகைமைக்கேற்ப (புள்ளி முன்னுரிமைக்கேற்ப) மேன்முறையீட்டாளர்கள், எதிர்ப்புக்குள்ளானோர், எதிர்ப்பைத் தெரிவித்தோர் என்போரை தற்காலிக பட்டியலில் உரிய இடங்களில் உட்படுத்தி திருத்தப்பட்ட தற்காலிக அட்டவணை தயார் செய்யப்படும்.

**10.5** ஒவ்வொரு வகைக்கும் உரிய திருத்தப்பட்ட தற்காலிக அட்டவணையில் பாடசாலைக்கு அனுமதிக்கக் கூடிய எண்ணிக்கைக்கு ஏற்ப மேலே உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இறுதி அட்டவணை தயார் செய்யப்படும்.

**10.6** தற்காலிக அட்டவணையிலும் இறுதி அட்டவணையிலும் ஏதாவது ஒரு வகையில் தெரிவு செய்ய வேண்டிய எண்ணிக்கையை பூரணமாகும் இறுதி நிலைக்கு உரிய புள்ளிக்குரியவரைத் தெரிவு செய்கையில் சமமாக புள்ளிகளைப் பெற்ற பிள்ளைகள் பலர் இருக்கும் சந்தர்ப்பத்தில் பாடசாலைக்குரிய அண்மித்த தூரத்திற்கேற்ப அவர்களை வரிசைப்படுத்தி தெரிவு செய்தல் வேண்டும். ஒவ்வொரு வகையிலும் வேறு வேறாக புள்ளி பெற்றுக் கொடுத்து அண்மை அடிப்படையில் பாடசாலையினைப் பெற்றுக் கொடுப்பது நியாயமானது என்பதால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் பாடசாலைக்கிருக்கும் அண்மைக்கமைய (தூரத்திற்கமைய) வரிசைப்படுத்த வேண்டும். (இது இறுதி ஆவணம் தயாரிக்கப்படும் போது பொருத்தமாக்கிக் கொள்ள வேண்டும்.)

**10.7** மேன்முறையீடுகள், எதிர்ப்புக்கள் பரீட்சிக்கப்பட்டதன் பின் பிள்ளைகளை தெரிவு செய்யும் இறுதி அட்டவணையும் காத்திருப்போரின் அட்டவணையும் எதிர்ப்பை பரீட்சிக்கும் குழு உறுப்பினர்களின் ஒப்பத்துடன் பாடசாலை அறிவித்தல் பலகையிலும் பாடசாலை இணையத்தளத்திலும் காட்சிக்கு விடப்படும்.

**10.8** **மேன்முறையீடு, எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட ஏதாவது ஒரு தற்காலிக தேர்வு பற்றி மேன்முறையீடு, எதிர்ப்பை பரீட்சிக்கும் குழு மூலம் வழங்கப்படும் தீர்ப்பு இறுதித் தீர்ப்பாகும். எதிர்ப்புக்குள்ளாகும் பிள்ளையின் பெற்றோர் / சட்டரீதியான பாதுகாவலருக்கு விசாரணைக்காக உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்தும் எதிர்ப்புப் பரீட்சைக்கு சமூகமளிக்காவிடின் மேன்முறையீடு மற்றும் எதிர்ப்பினை பரீட்சிக்கும் குழுவிற்க்கு ஒரு மனதான முடிவினை எடுக்கும் அதிகாரம் உண்டு.**

**10.9** பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர் மூலம் விண்ணப்பித்த ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு பிள்ளை தெரிவு செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பெற்றோர்/ சட்டரீதியான பாதுகாவலர் மூலம் தமது விண்ணப்பப்படிவத்தில் உள்ள பாடசாலை விருப்பு முன்னுரிமைக்கேற்ப முன்னுரிமை கூடிய பாடசாலையைப் பெற்றுக்கொடுத்து தெரிவு செய்யப்பட்ட ஏனைய பாடசாலைகளின் பெயர் அட்டவணைகளிலிருந்து பெயர் நீக்கப்படும்.

**10.10** இதன் பின்பு தெரிவு செய்யப்பட்ட மற்றும் தெரிவு செய்யப்படாத பிள்ளைகளின் பெற்றோருக்கு அதிபரின் கையொப்பம் பதவி இலட்சினையுடன் கூடிய கடிதம் மூலம் இதுபற்றி அறியத் தரப்படும்.

**10.11** முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை சேர்த்தல் கால அட்டவணை ஒன்றுக்கு ஏற்ப செயற்படுத்தப்படும். தெரிவு செய்யப்படும் மாணவர்கள் 2021 ஜனவரி மாதத்தின் பாடசாலை தொடங்கும் முதல் வாரத்திலேயே சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 11.0 தெரிவாகாத பிள்ளைகளுக்கு பாடசாலைகள் பெற்றுக் கொடுத்தல்

பாடசாலையொன்றுக்கும் தெரிவு செய்யப்படாத ஒரு பிள்ளையின் பெற்றோர்/ பாதுகாவலர் தமது பிள்ளைக்கு மாற்றுப் பாடசாலை ஒன்று பெற்றுக் கொள்வதற்காக தாம் வசிக்கும் பிரதேச வலயக் கல்விப் பணிப்பாளருக்கு புதிய விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். இதன்படி அனைத்து பிள்ளைகளுக்கும் பாடசாலைகளைப் பெற்றுக்கொடுத்தல் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் செயற்படுத்தப்படும்.

## 12.0 பிள்ளைகளை அனுமதித்தலின் போது பணமும் வேறு உதவிகளும் பெற்றுக் கொடுப்பதை தடைசெய்தல்

சகல அரசாங்கப் பாடசாலைகளுக்கும் பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பில் வசதிகள் சேவைக் கட்டணமும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர் கட்டணமும் எல்லா மாணவர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்வதற்கு பாடசாலை மூலம் அனுமதி பெற்றிருக்கும் நிதியும் தவிர்ந்த வேறு கட்டணமோ உதவிப் பணங்களோ வேறு பொருட்களோ பாடசாலைக்கோ பாடசாலையுடன் தொடர்புடைய அமைப்புகளுக்கோ மூன்றாம் தரப்பினர்களுக்கோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெற்றுக்கொடுத்தல் முற்றாக தடை செய்யப்படுகின்றது. பிள்ளைகளை அனுமதித்ததன் பின்பும் இவ்வாறு பெற்றுக் கொடுக்காதிருத்தல் வேண்டும். இவ்வாறு செயற்பட்டால் அது சட்டவிரோத செயலொன்றாவதுடன் தண்டனை பெறக்கூடிய குற்றமும் ஆகும் என்பதனைக் கருத்திற் கொள்க.

இந்த செய்தி பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள எந்த விடயம் தொடர்பான இறுதி தீர்மானம் கல்வி செயலாளர் வசமானதாகும்.

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு.**
**2021.05.31**